# அங்குசம்

# ANGUSAM

மலர் 1

இதழ் 2

19 JAN 2011
கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்



வித்தை விரும்பு - LOVE LEARNING

விலை 20/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்குசம்

# ANGUSAM

"வித்தை விரும்பு"

"LOVE LEARNING"

[illegible] யாழ்ப்பாணம்.

No.14, [illegible]

ஆலோசகர் Adviser

[illegible]

Prof. P. Balasundrampillai

Vice Chancellor, University of Jaffna.

காப்பாளர்கள் Patrons

[illegible]

Eng. S. A. Gnanendran

Co-ordinator, Open University

[illegible]

A. Sivakanthamoorthy

Principal, Teachers Training College, Kopay.

[illegible]

K. Sathasivamoorthy

Principal, Teachers Training College, Kopay.

[illegible]

Dr. T. Kamalanathan

President, College of Education

[illegible]

T. Rajaratnam

Director, Advanced Technical Institute

[illegible]

S. Santhiratnam

Principal, Technical College.

## இடம்பெயர்வும் உரிமைகளும்

உலகளாவிய ரீதியில் இடம்பெயர்ந்தவர்களின் பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வுகளை பெற்றுக் கொடுக்கும் முயற்சியில் தடம் பதித்துள்ளதாகக் கூறிக் கொள்ளுவது யு.என்.எச்.சி.ஆர் அமைப்பு.

யாழ் குடாநாட்டில் நீண்ட காலமாக பல்லாயிரக் கணக்கான மக்கள் உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்து வாழ்ந்து வருகின்றனர்.

உள்நாட்டு இடம்பெயர்வு தொடர்பான ஐ.நாவின் வழிகாட்டு விதிகளில் 'திரும்பி வருகை' மீளக் குடியேறுதல் மற்றும் மீள் ஒருங்கிணைதலின் போதான பாதுகாப்பு (Protection During Return, Resettlement and Reintegration) வலியுறுத்தப்பட்டுள்ளது. திரும்பிச் செல்வதற்கு அல்லது மீளக் குடியேறுவதற்கான உரிமை (Right to return or resettle) என்பதும் அங்கு விதந்துரைக்கப்பட்டுள்ளது.

சர்வதேச மனித உரிமைகள், மனிதாபிமான சட்டங்கள் மற்றும் அகதிகள் சட்டம் என்பவற்றி லிருந்தே இடம்பெயர்ந்தோர் தொடர்பான விதி முறைகள் உருவாக்கப்பட்டன.

ஆக, இதன் அடிப்படை விதிப்புகளை வழிகாட்டி யாகக் கொண்டு மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்துவதற்கு போதிய நடவடிக்கைகளை யு.என்.எச்.சி.ஆர் அமைப்பு மேற் கொள்ளுதல் வேண்டும்.

யுத்தத்துக்கு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ள தற் போதைய சூழ்நிலையிலும் இவ்வாறான முயற்சிகள் முனைப்புடன் மேற்கொள்ளப்படவில்லை. இது போன்ற அமைப்புகளின் பிரசன்னம் இங்கு தேவை யற்றதாகக் கருதுவதைத் தவிர்க்க முடியாததாய் விடலாம்.

மார்ச் 2003 ஆசிரியபீடம்.

# [illegible]

பக்கங்கள்


| | |
|---|---|
| அங்குசம் | |
| குறளும் கதையும் | 02 |
| காதல் நிகழ்வில் கண்களின் பங்கு | 03 – 04 |
| கதை | 05 |
| மாமேதை அல்பேர்ட் ஐன்ஸ்ரைன் | 06 – 09 |
| தாயாகி நிற்கும் 'நூலகம்' வாழ்வகம் | 10 – 13 |
| மனித உரிமைகள் தொடர்பான வரலாறு | 14 – 16 |
| சொந்தங்களைத் தேடி | 16 |
| புதுமைலோலன் | 17 – 18 |
| எயிட்ஸிலிருந்து விழிப்புணர்வு | 19 – 26 |
| அங்குசம் எந்து | 27 |
| நூல் அறிமுகம் | 28 |
| சுபியர் சேவை | 29 – 30 |
| வஞ்சிக்கப்பட்ட மலர் | 31 |
| English Park | 32 – 33 |
| மனித நடத்தையை தீர்மானிப்பது சூழலா? பரம்பரையா? | 36 – 41 |
| யாவும் கற்பனை (சிறுகதை) | 42 – 50 |
| கோழி வளர்ப்பு முறைகள் | 51 – 55 |
| பயணங்கள் | 56 |
| புரூஸ்லீ | 57 – 58 |
| கிரிக்கெட் உலக கிண்ண விபரம் | 59 |
| தர்மத்தின் வழியில் சமாதானம் | 60 |
| பொன் விளக்கு | 61 |
| அந்த மரநிழலில் ............ | 67 – 69 |
| முத்துக் குளித்தல் | |


தொகுப்பும் அமைப்பும் : ஆசிரியர் குழு

ஓவியங்கள் : எஸ். பிரசாந்தன்
யாழ் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறளும் கதையும்

தெல்லியூர் சி. ஹரிகரன்


கம்பராமாயண காப்பியத்திலே முதல்நாள்போர். தனது போருக்குப் பெருந்துணையாகவிருந்த சகல படைகளையும் இழந்து மாமியார் மருங்கிற் சென்ற மருமகள் போன்று நிறங் கரிந்திட நிலம் விரல் கிளைந்திட நிற்கிறான் இராவணன். அவ்வாறு நின்ற இராவணனைப் பார்த்த இராமபிரான் அவனுக்கு உபகாரியாக மாறி, "நீ வெறுங்கையோடு நிராயுதபாணியாக நிற்கின்றாய். இந்நிலையில் உன்னை நான் கொன்றால் எனது வீரத்திற்கு களங்கம் ஏற்பட்டுவிடும். ஆகையினாலே, நீ இன்று போய்ப் போர்க்கு நாளை வா" என்று அவனுக்கு உயிர்க் கொடை அளித்தார். இதனை கம்பர் 'கோசலை நாடுடை வள்ளல்" என்று புகழாரம் செய்கின்றார்.

"பேராண்மை என்ப தறுகண் ஒன்றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு"

அதாவது எமக்கு எவ்வாறான பகைவனாக இருந்தாலும் அவன் எம்முன் நிராயுதபாணியாக எம்மோடு போர் புரிவதற்கு ஏற்ற நிலைமை இல்லாதவனாக இருக்கின்ற போது அவனுக்கு நாம் கருணைகாட்ட வேண்டும். உடனே அவனுக்கு உபகாரியாக மாறிவிட வேண்டும். மாறாக, அவனை கொல்வதற்கு முயற்சித்தல் ஆகாது. இதுவே மேற்படி கதைமூலம் உணர்த்தப்படுகிறது.



# கறை



கறையில்லா நிலவென்று
உன்னை
நிறை சொல்லி
நீள நேசித்தேன் - நீ
பிரிந்து சென்றபின் தான்
தெரிந்தது
நான் கறைபட்டிருப்பது!

# எ(உ)னது பெயர்

இந்தக் காற்றுமண்டலம்
நூற்றாண்டு நூற்றாண்டாய்
கர்வப்படும்
உனது பெயரை
எனது உதடு உச்சரிப்பதால் ....
நீயோ - வெறும்
மௌன மண்டலத்தையே
மரியாதை செய்து கொண்டிருக்கிறாய்
எனது பெயரை இன்னும்
உச்சரிக்காமல்.....

என். கஜசுஜன்
சண்டிலிப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமேதை அல்பேட் ஐன்ஸ்ரைன்




எஸ். அஜித்
விரிவுரையாளர்,
கணிதத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.


20ம் நூற்றாண்டில் வாழ்ந்த தலைசிறந்த அறிஞர்கள் வரிசையில் மாமேதையாக திகழ்ந்த விஞ்ஞானி அல்பேட் ஐன்ஸ்ரைன் ஆவார். விஞ்ஞான உலகில் தனது கண்டுபிடிப்புகள் மூலம் பெரும் புரட்சியை உண்டு பண்ணிய ஆராட்சியாளர்.

1879ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14ஆம் திகதி ஜேர்மனியில் பிறந்த இவர் யூத இனத்தவர். பள்ளிப் படிப்பில் மிகச் சாதாரண மாணவனாகவே இருந்தார். இவருடைய தந்தையார் சிறு மின்சாரத் தொழிற்சாலை ஒன்றை சொந்தமாக நடாத்தி வந்தார். அங்கு சிறியளவிலான ஆராய்ச்சிகளில் ஈடுபடுவது ஐன்ஸ்டைனுடைய பொழுது போக்காகும். கணிதம், இயற்பியல் ஆகிய பாடங்களில் மிகுந்த ஆர்வமுடையவராக இருந்தார்.

ஜூரிச் பல்கலைக்கழகத்தில் பௌதீகத்தையும் கணிதத்தையும் முக்கிய பாடங்களாக பயின்று வந்தார் ஐன்ஸ்ரைன். விஞ்ஞானக் கட்டுரைகளிற்காக இப் பல்கலைக்கழகத்தால் அவருக்கு டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது. தொடர்ந்து அங்கேயே சில காலம் பேராசிரியராகவும் பணியாற்றினார். இடம், காலம், பிரபஞ்சம் பற்றிய இவருடைய ஆராய்ச்சிகளே "சார்புக் கொள்கை" எனப்படுகின்றது. அணுவில் மறைந்திருக்கும் அளப்பரிய ஆற்றல்களை வெளிக்கொணர அயராது உழைத்தவர். இவரின் "பொருள் சக்தி மாற்றக் கோட்பாட்டின்" அடிப்படையிலேயே அணுக்குண்டு தயாரிக்கப்படுகிறது. இவர் தம் வாழ்நாளின் இறுதி வரை அணுவை ஆக்க பூர்வமாக பயன்படுத்தவே உதவி வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருக்குப் பிரபஞ்சம் பற்றிய அறிவு அதிகளவில் இருந்தது. அல்பேர்ட் ஐன்ஸ்டீனை அறிஞர் சிலர் சந்தித்து "நாம் ஏன் இங்கே இருக்கின்றோம்?" என்று கேட்டார்கள். "பிரபஞ்சமே ஒரு விபத்து என்றால், நாமெல்லாம் விபத்துக்களே. ஆனால் இந்தப் பிரபஞ்சத்தில் ஏதாவது பொருள் இருந்தால், நமக்குள்ளும் பொருள் இருக்கின்றது" என்று அவர் பதிலளித்தார். "இறுதியில் தோல்வியடையும் செயலில் வெற்றியடைவதனைக் காட்டிலும், இறுதியில் வெற்றி பெறும் ஒரு செயலில் தோல்வியடைவேன்" என்பார். "நான் இயற்பியலை அதிகம் படிக்கப் படிக்க, விஞ்ஞானத்தின் தாண்டி அறிந்து அகப்படாத உண்மையை நோக்கி அதிகம் ஈர்க்கப்படுகின்றேன்" என்றார்.

இவரது இளம் பராயத்தில், கிட்லருடைய ஆட்சியில், கட்டாய இராணுவ சேவை ஜேர்மனியில் அறிமுகம் செய்யப்பட்டது. இதனால் சில காலம் இராணுவத்தில் பணியாற்றினார். ஐன்ஸ்டீனுடைய கருத்துக்கு ஆளுவோர் செவிசாய்க்கவில்லை. அதனால் ஜேர்மனியை விட்டு வெளியேற முடிவு செய்தார். ஜேர்மனியை விட்டு வெளியேறிய ஐன்ஸ்டீன் சுவிட்சர்லாந்தில் குடியேறினார். ஜூரிச் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றார். அங்கு அவரது அறிவாற்றலால் ஈர்க்கப்பட்டுக் காதலிப்பதே மிலா என்ற பெண்ணை ஐன்ஸ்டீன் மணந்தார். அவர்களிற்கு இரண்டு குழந்தைகள் கிடைத்தன. பிள்ளைகள் பிறந்த பின் மிலாவின் போக்கில் மாற்றங்கள் ஏற்பட்டன. உலக மேதையான ஐன்ஸ்டீனை உள்வாங்கிப் புரிந்து கொள்ள முடியாமல் மிலா அவரைவிட்டுப் பிரிந்தார்.

தனக்கு ஒரு துணை வேண்டி, தம் தேவைகளை அறிந்து, தாயன்போடு நடந்து கொள்கின்ற ஒரு பெண்ணை ஐன்ஸ்டீன் தேடினார். அவருடைய உறவுக்காரப் பெண்ணான எல்சா என்பவரை மறுமணம் புரிந்தார். திருமணமாகி சிறிது காலத்திலேயே எல்சா மறைந்தார். இச்சம்பவங்கள் ஐன்ஸ்டீனை சோகத்திலாழ்த்தின.

இது போன்ற நிகழ்வுகள் இவரது விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்குத் தடையாக இருப்பதை நினைத்து அவர் வருந்தினார். இனி விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்காகவே வாழ்வது என முடிவு செய்தார் [illegible]

"ஒளியின் விளைவு" குறித்து ஆராய்ச்சி செய்தார். உலோகங்களின் மேற்பரப்பின் மீது ஒளிவிழும் போது இலத்திரன்கள் வெளிப்படுகின்றன. இதனைக் கொண்டு சிறிய அளவில் மின்சக்தியை உண்டாக்கலாம் எனக் கண்டறிந்தார். இவ்வாராய்ச்சியே பெருமளவு உதவியாக வழி வகுத்தது. இதற்காக 1921ஆம் ஆண்டு விஞ்ஞானத் துறைக்கான நோபல் பரிசு இவரைத் தேடி வந்தது.

உலகின் பல பகுதிகளிலும் ஆராய்ச்சிகள் மேற்கொண்ட இவர், [illegible], அமெரிக்கா போன்ற சொந்த நாடான ஜேர்மனிக்கு வந்தார். அங்கு யூதர்களையும், யூத அறிஞர்களையும் ஹிட்லர் இழிவாக நடத்துவதைக் கண்டு வருந்தினார். அதனால் மீண்டும் அமெரிக்கா சென்று அங்கு குடியேறினார்.

இரண்டாவது உலக மகாயுத்தம் கடுமையாக நடந்து கொண்டிருந்தது. அப்போது அணுக்குண்டுகளை ஜப்பானில் உள்ள ஹிரோஷிமா, நாகசாகி ஆகிய இரு நகரங்கள் மீது அமெரிக்கா வீசியது. இக் கொடூர சம்பவம் 1945ஆம் ஆண்டு இடம் பெற்றது. பல இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டதோடு நகரங்கள் தரைமட்டமாகின. இதனைக் கேள்வியுற்ற ஐன்ஸ்டீன், தொடர்ச்சியாக பல நாட்கள் உள்ளம் நொந்து அழுத வண்ணமே இருந்தாராம். ஆக்க பூர்வமான காரியங்களுக்காக இவர் கண்டறிந்த கோட்பாடுகள், அழிவிற்கு பயன்படுவதனை அறிந்து வேதனை உற்றார். விஞ்ஞான ஆராய்ச்சிகளிற்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டு, போரையும், அணு ஆயுதங்களையும் எதிர்த்து தீவிர பிரச்சாரத்தில் ஈடுபடலானார்.

எந்நேரமும் சிந்தித்த படியே இருக்கும் இவர் "சிந்திக்காமல் வாழ்வதில் பயனில்லை" என்பார். அதே போல் "கண்டுபிடிப்புகளை ஆக்க பூர்வமானதாக இல்லா-விட்டால் அதனால் பயனற்றது. இதனை விட சிந்தியாமலே இருந்துவிடலாம்" என்றும் கூறுவார்.

ஐன்ஸ்டீனுடைய கோட்பாடுகளை வைத்துக்கொண்டு ஒளியை விட பல மடங்கு வேகமாகச் செல்லும் ரொக்கெட்டுக்களை செய்வதற்காக இன்றைய விஞ்ஞானிகள் முயற்சித்த வண்ணம் உள்ளனர்.



இவ்வாறான மாமேதை அல்பேர்ட் ஐன்ஸ்டீன் தனது 76வது வயதில் 1955ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18ம் திகதி அமெரிக்காவில் மறைந்தார். மறைந்தும் மறையாப் புகழ் எய்தினார்.

இத்தனை பெரிய விஞ்ஞானியாகவும் மாமேதையாகவும் இருந்த அல்பேர்ட் ஐன்ஸ்டீனுக்கு அசைக்க முடியாத அளவிற்கு கடவுள் நம்பிக்கை இருந்தது. ஆத்திகம், நாத்திகம் என்றெல்லாம் பேசுவோர் மத்தியில் எம்மை விட மேலான பொருள் உண்டு அதுவே நம்மை இயக்கிக் கொண்டுள்ளது. அது தான் கடவுள் என்று உறுதிபடக் கூறினார். "அவனின்றி அணுவும் அசையாது" என்பது இவருடைய வாதம்.

●●●●●

## இலக்கிய சர்ச்சை

அங்குசம் தை - மாசி இதழில் இடம்பெற்ற 'இலக்கிய சர்ச்சை' தொடர்பாக ஏராளமான வாசகர்-களின் கருத்துக்கள் வந்து கிடைத்தவண்ணமுள்ளன.

அநேக வாசகர்கள் அந்தப் பாடல் வரிகளை எழுதியவர் 'அங்குசம்' தை, மாசி இதழின் பின் அட்டைப் படத்தை அலங்கரித்த பண்டிதர் க.சச்சிதானந்தன் அவர்களே என்று எழுதியுள்ளனர்.

அப்பாடல் வரிகளை பண்டிதர் க.சச்சிதானந்தன் எழுதவில்லை என்பதனை மட்டும் ஆணித்தரமாகத் தெளிவுபடுத்த விரும்புகிறோம்.

உங்கள் கருத்துக்கள் தொடரட்டும். ஆரோக்கியமான சர்ச்சைகள் அடுத்த இதழில் பிரசுரமாகும்.

ஆசிரியபீடம்
'அங்குசம்'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயாகி நிற்கும் தாயகம் வாழ்வகம்

இராஜ். நகைலன்

கொக்குவில் பொற்பதி வீதியில் இயங்கிவரும் 'தாயகம்' என்ற சிறுவர் வாழ்வகம் 07-05-2003இல் தன் தாய்மையின் இரண்டு ஆண்டுகளை நிறைவு செய்கின்றது.


யுத்தத்தின் கோரத்தினாலும் குடும்பப் பிரச்சனைகளாலும் பெற்றோரை இழந்த, பிரிந்த பிஞ்சு நெஞ்சங்கள் பலவற்றுக்கு தாயகம் நிம்மதியான வாழ்வளித்து வருகிறது. இங்கே ஐந்து வயது முதல் பதினைந்து வயது வரையான சுமார் அறுபது பிள்ளைகளுக்கு தாயாகவும் தந்தையாகவும் இருந்து மனம் நிறைந்த வாழ்வைக் கொடுத்து வருகின்றனர் திரு.திருமதி எஸ்.வி.ஸ்ரீதரன் தம்பதியினர்.



இங்குள்ள சிறார்கள் அதிகாலை 5 மணிக்கு துயிலெழுந்து விடுகிறார்கள். காலைக் கடன்களை முடித்து சாமியறையில் தியானத்தில் ஈடுபடுவர். அதன்பின் யோகாசனப் பயிற்சி இடம்பெறும். தமது கடமைகளை முடித்து, உண-வருந்தி பாடசாலைக்கு ஆயத்தமாவர். 'தாயகம்' இல்லத்-துக்குரிய வானில் பாடசாலை செல்வர். இவ் இல்லத்தின் சிறுவர்களில் யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் ஐந்து பேரும் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் ஆறு பேரும், கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் 43 பேரும் கோண்டாவில் சிறுவர் பாலர் பாடசாலையில் ஒருவரும் கல்வி பயில்கின்றனர்.

பாடசாலை முடிந்து, இல்லத்திற்கு வந்து உணவருந்துவர். சில மணிநேர விளையாட்டின் பின்னர் இல்லப் படிப்பகத்தில் வகுப்புகள் நடைபெறும். இடைவேளையில் மாலை நேரத் தியானமும் இடம்பெறும். இரவு 9 மணிக்கு உணவருந்துவர்.

இந்த இல்லத்தில் பாடசாலை போன்று வகுப்பறைகள் உருவாக்கப்பட்டு தரம் பிரிக்கப்பட்டுள்ளன. பட்டதாரி ஆசிரியர்களால் பிரத்தியேக வகுப்புகள் நடத்தப்படுகின்றன.



தனிபொருவரால் - வெளிப்புற உதவிகள் எதுவுமின்றி - நிறுவப்பட்டு, நிர்வகிக்கப்பட்டு வரும் 'தாயகம்' சிறுவர் இல்லத்தில், ஒழுக்கக் கட்டுப்பாடுகள் சிறப்பாகப் பேணப்படுகின்றன. சைவ உணவும், சைவ கலாசாரமும் இங்கு பின்பற்றப்படுகிறன.

இந்த இல்லத்தில், சிறுவர்களை பிரத்தியேகமாய்க் கவனித்துக் கொள்ளவும் ஒழுங்குபடுத்துவதற்கும் உணவுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையை பூர்த்தி செய்வதற்கும் காவலுக்கும் மற்றும் வெளியாருடன் தொடர்பை பேணுவதற்குமென பலர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இங்குள்ள சிறார்களின் மகிழ்ச்சிக்காகவும், பொழுது போக்குக்காகவும் தொலைக்காட்சி மற்றும் விளையாட்டு உபகரணவசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பாடசாலை விடுமுறை காலங்களில் சிறுவர்கள் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

வைத்தியர்கள் 'தாயகம்' இல்லத்துக்கு வருகை தந்து சிறுவர்களை மருத்துவ சோதனை செய்து சிகிச்சையளிக்க வசதி செய்யப்பட்டுள்ளது.

இந்த இல்லத்தின் நிர்வாக ஆலோசனைக் குழுவில் ஓய்வுபெற்ற யாழ் மாவட்ட நீதிபதி மு. திருநாவுக்கரசு (விகடகவி), சாவகச்சேரி நீதிவான் க.அரியநாயகம், வைத்திய கலாநிதி ஆ.கமலநாதன் நீர்பாசனத் திணைக்களத்தைச் சேர்ந்த என் ஸ்ரீரங்கநாதன் யாழ் செயலக மேலதிக உதவி பதிவாளர் நாயகம் ந. சதாசிவ ஐயர், உதயன் பத்திரிகையின் விளம்பர முகாமையாளர் சுடர் இ.மகேந்திரன் போன்றோர் இடம்பெறுகின்றனர்.



இந்த சிறுவர் வாழ்வகத்தை கோப்பாய் இராச பாதைக்கு இடமாற்றும் வகையில் அங்கு விசாலமான காணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. அமைக்கப்படும் புதிய கட்டடத்தில் மேலும் நூற்றுக்கணக்கான சிறுவர்களை உள்வாங்கவும், அவ் இல்லச் சூழலில் பொழுது போக்கு ஏற்பாடுகள், மைதான வசதி மற்றும் ஆலயம் என்பவற்றை ஏற்படுத்தவும் அதன் நிர்வாகி ஸ்ரீதரன் திட்டமிட்டுள்ளார்.

இந்த வாழ்வகத்தை தொடர்ந்து முன்னெடுக்கும் வகையில் பெரும் பணத்தொகையொன்றை நிரந்தர வைப்பிலிடும் முயற்சியும் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இங்குள்ள சிறுவர்களின் எதிர்காலம் தொடர்பாக இல்லத்தின் நிர்வாகி ஸ்ரீதரனிடம் கேட்கப்பட்டது.

"யுத்தத்தினால் பெற்றோரை இழந்த பிள்ளைகள் மட்டுமன்றி குடும்பப்பிரச்சினைகளால் பெற்றோரை பிரிந்த பிள்ளைகளும் 'தாயகத்தில்' அரவணைக்கப்பட்டுள்ளனர். சிறார்கள் எல்லா விதத்திலும் ஆரோக்கியமான சூழலில் வளர்க்கப்படுகின்றனர். கால ஓட்டத்தில் தமது எதிர்காலம் குறித்த சரியான போக்கை அவர்களே தீர்மானித்துக்கொள்ளுவர். அதற்கான உரிமை மட்டுமல்ல திறமையும் அவர்களிடம் உண்டு. இவ்வாறு ஸ்ரீதரன் கூறினார்.

நாட்டில், சமூக நலன் கருதி ஆற்றக்கூடிய பணிகள் பல உள்ளன. தொடர் சிக்கல் நிறைந்த இச்சேவையைப் புரிய முன்வரக் காரணம் என்ன?

"நாங்கள் பத்துப் பேர் கொண்ட குடும்பம்." வறுமையின் கொடுமையை அநுபவிக்க வேண்டிய கட்டாய சூழல், எமக்குச் சிறு வயதிலேயே அமைந்தது. ஒரு நாள் மழை பொழிந்தால் அன்றிரவு எமக்குச் சிவராத்திரியாகிவிடும்.

நெருக்கடிக்குள்ளாகித் தவிக்கும் சிறுவர்களை மீட்கவேண்டிய தேவை, அத்தகைய அவசியம் குறித்த எண்ணக்கரு கடந்த அந்த நாட்களிலேயே என் மனதில் துளிர்விட்டிருந்தது. அந்தச் சிந்தனையின் செயல்வடிவமே 'தாயகம்' ஆகும். எனது மதிரல் கலர் லாப் இலிருந்து பெற்றுக் கொள்ளும் வருமானம் முழுவதும் இந்தச் சிறுவர் வாழ்வகத்துக்கென அர்ப்பணிக்கப்படுகிறது"

# மனித உரிமைகள் தொடர்பான வரலாறு
# (History of Human Rights)

வேஜினி வல்லிபுரம் (பி.எஸ்சி)
மனித உரிமைகள் ஆணைக்குழு
யாழ்ப்பாணம்.

மனித உரிமைகள் தொடர்பான வரலாறு என நோக்கும் போது அதற்கு திட்டவட்டமான வரலாற்றை நாம் காண முடியாது. மனித உரிமைகள் என்ற பெயரில் காணப்படாத போதிலும் பண்டைக்காலம் தொட்டே சில ஒழுங்குமுறைகள், நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் என்பவற்றின் மூலம் மனித உரிமைகள் பேணப்பட்டு வந்துள்ளமையை நாம் அறியலாம். இவ்வாறே அனேக சமயக் கொள்கைகளினதும் அடிப்படை 'மனித உரிமைகளை மதித்தலே' என்பதை அம் மதக் கொள்கைகளை நன்கு ஆராய்ந்து பார்த்தால் புலப்படும். "தன்னைப்போல் பிறரையும் நேசி" என்ற வாக்கியத்தையும் "நீ விரும்புவதை உன் சகோதரனுக்கும் விரும்பு" என்ற மணிமொழியையும் நோக்கும் போது அது தெளிவாக விளங்குகின்றது.

மனித உரிமைகள் சகல விடயங்களிலும் உள்ளடக்கப்பட்டு எவ்வாறு பேணப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்ட போதிலும், அது தொடர்பான மீறல்களும் இதே போன்ற வரலாற்றைக் கொண்டமைந்துள்ளது என்பதும் வெளிப்படையான ஒன்று. இனம், மதம், மொழி, அதிகாரம், ஆட்சி போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு நடந்து முடிந்த பேரழிவுகள் இதற்கு தகுந்த சான்றாக அமைகின்றன.

எது எவ்வாறாயினும் மனித உரிமைகள் என்பதற்கான எழுத்து ரீதியான வரலாறு பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே ஆரம்பமாகியுள்ளது. முதலாவது எழுத்துமூலச் சான்றாக 1215ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் கைச்சாத்திடப்பட்ட மெக்னா கார்டா ஒப்பந்தத்தைக் குறிப்பிடலாம். இது அக்காலத்தில் இங்கிலாந்தை ஆண்ட கொடூர ஆட்சியாளரான ஜோன் மன்னரின் வரிவிதிப்பு



முறையால் பாதிக்கப்பட்ட பிரபுக்கள், அவருக்கெதிராக கிளர்ந்தெழுந்ததன் பின்னர் 63 பிரிவுகளை உள்ளடக்கிய இவ்வொப்பந்தம் உருவாக்கப்பட்டது. இவ்வொப்பந்தம், தனிமனித சுதந்திரத்தைப் பாதுகாப்பதோடு சட்டத்தின் முன்னே சகலரையும் சமமாக மதிக்கும் தன்மையையும் உள்ளடக்கியுள்ளது. அதுமட்டுமன்றி நடைமுறையிலுள்ள சட்டத்தின்படி ஆட்சிசெய்ய இணக்கம் காணப்பட்டதோடு ஆட்சியாளர் நினைத்த விதத்தில் சட்டத்தை மாற்றியமைக்கும் தன்மையையும் செல்லாததாக்கிவிட்டது. இதன் 39ஆம் பிரிவு மிக முக்கியமானதாகும். இந்தப் பிரிவின் படி சட்டத்திற்கு புறம்பாக ஒருவரை சிறையில் இடவோ, சட்டத்தின் பாதுகாப்பிலிருந்து அகற்றவோ அல்லது அவரை இல்லாதொழிக்கவோ தடை செய்யப்பட்டுள்ளது. தனி மனிதனின் சுதந்திர உரிமையை உறுதிப்படுத்தி 37முறை திருத்தி அமைக்கப்பட்ட இவ்வொப்பந்தம் 1623இல் சேர் எட்வேட் கோக் மூலம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதோடு 1642இல் அங்கீகரிக்கப்பட்டு இங்கிலாந்து சட்டத்தின் ஒரு அங்கமாக மாறியது.

அடுத்ததாக, வரலாற்றின்படி மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட மிக முக்கியமான சட்டமாக 'ஹேபியஸ் கோபஸ்' சட்டத்தைக் குறிப்பிடலாம். இது 1679இல் உருவாக்கப்பட்டது. இதன்மூலம் யாரேனும் ஒருவர் சட்டத்திற்கு முன்னே கொண்டுவரப்படாமல் கைது செய்யப்படுவது தடை செய்யப்பட்டுள்ளது.

1688இல் மனிதனின சுதந்திரம், உரிமைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தின் மற்றொரு முக்கிய நடவடிக்கையாக பிரித்தானிய உரிமைகள் சாசனம் அமைக்கப்பட்டது.

1917இல் ஏற்பட்ட கைத்தொழிற் புரட்சியினால் தொழிலாளர்கள் மிக மோசமான முறையில் நடாத்தப்பட்டார்கள். இக்காலப்பகுதியில் மனித உரிமைகளும் அவை பற்றிய புதிய கொள்கைகளும் உருவாகத் தொடங்கின. இந்தக் கொள்கையின் வளர்ச்சிக்கு கார்ல்மார்க்ஸின் கருத்துக்கள் கூடிய செல்வாக்கைச் செலுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் ஏற்பட்ட உலகப்போர்களின் போது நாடுகள் தனிமைப்படுத்தப்பட்டு தாக்கப்பட்டன. ஒரு குறித்த தேசத்தில் பிறந்தவர் என்பதால் மக்கள் தமது உரிமைகளை இழந்தனர். இவற்றைத் தவிர்ப்பதற்காக 1945இல் ஐக்கிய நாடுகள் சபை என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. இந்த ஐ.நா.சபையினர், ஒப்பந்தம் செய்தார்கள். இதனையே மனித உரிமைகளை கொண்டு டிசம்பர் 10ஆம் திகதி மனித உரிமைகள் தினமாக கொண்டாடப்பட்டு வருகின்றது.

மனித உரிமைகளுக்கு அடிப்படைச் சுதந்திரங்களுக்குமான உலக நாடுகளின் மதிப்பைப் பெறுவதற்காகவும் அவற்றை மேம்படுத்த செயல்நிலைப்படுத்துவதற்காகவும் ஐ.நா. நிறுவனத்தின் கூட்டுறவுடன் இணைந்து கொள்ள அங்கத்துவ நாடுகள் உறுதி கொண்டுள்ளன. இதனால் மனித உரிமைகள் தொடர்ந்தும் பேணப்பட்டு வருவதோடு பெண்களுக்கான உரிமைகள், சிறுவர்களுக்கான உரிமைகள், இடம்பெயர்ந்தோருக்கான விசேட உரிமைகள் என பல பிரிவுகளையும் உள்ளடக்கியதாக விரிவடைந்து வருகின்றமை காணக் கூடியதாக உள்ளது.

(உரிமைகள் - வளரும்....)

## சொந்தங்களைத் தேடி

தொலைந்துபோன என்
சொந்தங்களைத் தேடினேன்
தண்ணீர் வாளிக்குள் நிரம்பியது
கண்ணீர்த்துளிகள் மட்டுந்தான்!

('அங்குசம்' தை - மாசி இதழிற்கான அட்டைப் படக் கவிதை
- முதலாம் பரிசுக்குரியது)

எஸ்.என்.சிந்தா
விவசாய பீடம்
(யாழ் - பல்கலைக்கழகம்)

## புதுமை லோலன்

கலட்டி வண்ணார் பண்ணையிலே 1922ஆம் ஆண்டு மே மாதம் 4ஆம் திகதி பிறந்த புதுமை லோலனின் இயற்பெயர் வேலுப்பிள்ளை கந்தையா கந்தசாமி என்பதாகும்.

யாழ் வண்ணை நாவலர் பாடசாலையில் தொடக்க நிலைக் கல்வியைப் பெற்ற புதுமை லோலன், தனது ஆங்கிலக் கல்வியினை யாழ் வண்ணை வைத்தீஸ்வரக் கல்லூரியில் கற்றுக் கொண்டார். பலாலி அரசினர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியின் ஆரம்ப அணியில் ஒருவராக 1946 ஆம் ஆண்டு பயிற்சியை முடித்து வெளியேறிய புதுமை லோலன், காரைநகர் பாலாவோடை தமிழ்க்கலவன் பாடசாலையில் ஆசிரியப் பணி புரிந்தார். தொடர்ந்து ஹிங்குராக்கொட யூனியன் பாடசாலை, வெலிகந்த தமிழ்க்கலவன் பாடசாலை, புத்தூர் சோமஸ்கந்தா ஆரம்ப பாடசாலை, வண்ணை வைத்தீஸ்வரா ஆரம்ப பாடசாலை, நவாலி சைவத் தமிழ் வித்தியாலயம், யாழ் மஸ்ர உத்தீன் பாடசாலை போன்ற பாடசாலைகளில் ஆசிரியராகவும் ஆனைக்கோட்டை தமிழ்க்கலவன் பாடசாலை அதிபராகவும் கடமையாற்றினார். 1984ஆம் ஆண்டுவரை சுமார் 40 வருட காலம் ஆசிரியராகவும், அதிபராகவும் பணிபுரிந்து ஓய்வு பெற்றார்.

புதுமை லோலன், 1959ஆம் ஆண்டு கனகமணி என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு மூன்று ஆண்களும் பெண்களுமாக ஆறு பிள்ளைகள் உண்டு.

1950 ஆம் ஆண்டு முதல் 1963ஆம் ஆண்டு வரையான ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் புதுமைலோலன் எழுதிய சிறுகதைகளும் குறிப்பிடத்தக்கவை. ஈழகேசரி, சுதந்திரன் ஆகிய பத்திரிகைகளே புதுமை லோலனை உருவாக்கியவை ஆகும். புதுமை லோலனின் முதலாவது சிறுகதை 1952 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் திகதி சுதந்திரனில் வெளிவந்தது. தொடர்ந்து ஆனந்தன், புதினம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினகரன், ஐக்கியதீபம், ஈழகேசரி தொண்டன், காதும் விவேகி போன்ற பத்திரிகைகளிலும் இவரது சிறுகதைகள் வெளி-வந்தன. சிந்தனை, அலைநாரம், அமுதுமாபக்கம், புத்தன், பரிசு, மாகந்தி, தாயின் மணிக்கொடி போன்ற இவரது சிறுகதைகள் குறிப்பிடத்தக்கன. 'அப்பே லங்கா' என்ற இவரது சிறுகதை பலதரப்பட்டவர்களாலும் பேசப்பட்ட ஒன்றாகும். 50இற்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ள புதுமைலோலன், 13 சிறுகதைகள் அடங்கிய தொகுதி ஒன்றையும் வெளியிட்-டுள்ளார்.

ஏமாற்றம் (கசங்கிய ரோஜா) என்ற குறு நாவலையும் காவி, நிலவும் பெண்ணும் ஆகிய நாவல்களையும் இவர் எழுதியுள்ளார்.

மூத்த எழுத்தாளர் வரதர் நடத்திய 'ஆனந்தன்' என்ற திங்கள் இதழின் இணை ஆசிரியராகவும் இருந்துள்ளார். 'தமிழரசு' என்ற அரசியல் வாரப் பத்திரிகையினதும் ஆசிரியராக விளங்கிய இவர், ஏராளமான அரசியல் கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

ஈழத்தில் பேச்சுக்கலை வைவரப் பெற்றவர்களில் புதுமைலோலன் முக்கியமானவர். தமிழரசுக் கட்சியின் அரசியல் மேடைகளில் இவர் பிரசாரப் பீரங்கியாக விளங்கினார்.

காலி முகத்திடலில் சாத்வீகச் சத்தியாக் கிரகம் இருந்தபோது, காடையரால் தாக்கப்பட்டு மூட்டுடன் அவரது வலதுகை கழன்ற நிலையில் பெயிரா ஏரிக்குள் தூக்கி வீசப்பட்டார். யாழ் கச்சேரி முன்றிலில் சத்தியாக்கிரகம் இருந்தமைக்காக தமிழ்த் தலைவர்களுடன் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தார். அந்த வேளையிலேயே 'அன்பு மகள் அன்பரசிக்கு' என்ற நூலை புதுமை லோலன் எழுதினார்.

பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கை இவரைப் பெரிதும் கவர்ந்திருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எயிட்ஸிலிருந்து விழிப்புணர்வு

ஆ. ஜென்சன் றொனால்ட்
திட்ட அலுவலர்
ரீ.ஆர்.ஆர்.ஓ - யுனிசெப்
சுகாதார விழிப்புணர்வு.

வருடாந்தம் மூன்று மில்லியனுக்கு மேற்பட்டோரைக் காவுகொள்ளும் எயிட்ஸ் எனும் அரக்கனிடமிருந்து தப்புவதற்கு பூரணமான விழிப்புணர்வு ஒன்றே தேவை.

எயிட்ஸ் என்றவுடன், பலர் மனதிலும் "பாலியல் சீர்கேடு" பற்றிய சிந்தனையே மேலோங்குகிறது. 98 வீதம் இதன் வழியினூடு பரவுவது தெளிவு.

இலங்கையில் இந்நோய்க்கான HIV கிருமித்தொற்றுக்கு உள்ளானவர்களாக 8500 பேர் வரை இருக்கலாமென நம்பப்படுகிறது. இது வடபகுதி தவிர்ந்த புள்ளிவிபரம் ஆகும். இவர்களில் 465 பேர் வைத்தியசாலைகளில் குருதிப் பரிசோதனை வடாக உறுதிப்படுத்தப்பட்டவர்கள். இவர்களில் நோய்த்தாக்கத்தால் இறந்தவர்கள் (150) பேர். இறந்தவர்-களில் (07) பேர் குழந்தைகள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரையில் HIV தொற்று உள்ளதாக உறுதிசெய்யப்பட்டவர்கள் (23) பேர். இதில் (18) பேர் இறந்துவிட்டார்கள். இனங்காணப்படாத HIV தொற்று உடையவர்கள் (400) பேர் வரை இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

இலங்கையில் 1986ஆம் ஆண்டு, எயிட்ஸ் நோய் நிலையில் இனங்காணப்பட்ட முதல் நோயாளி வெளிநாட்டைச் சேர்ந்தவர்.

யாழ்ப்பாணத்தில் 1993ஆம் ஆண்டு முதலாவது நோயாளி இனங்காணப்பட்டார்.

தென்னாபிரிக்காவில் வாழும் "பச்சை இலைக் குரங்கு"களில் இந்நோய்க்காரணியாகிய HIV உள்ளது. இவை சாதாரணமாக அவற்றிற்கு பாதிப்பு ஏற்படுத்துவதில்லை.

இந்த வகைக் குரங்குகளின் குருதியைத் தமது உடல்களில் பூசிக்கொண்டு நடனமாடுவது, அவற்றுடன் பாலியல் தொடர்புகளில் ஈடுபடுவது என்பவற்றினூடாக மனித சமுதாயத்தை இவ் வைரஸ் அடைந்துள்ளது.

இன்றைக்கு நாற்பது மில்லியனுக்கும் அதிகமானோர் உலகில் இந் நோய்க்கிருமியின் தொற்றலுக்கு உள்ளாகியுள்ளனர்.

இதைவிட வருடந்தோறும் ஐந்து மில்லியனுக்கு மேற்பட்டோர் புதிதாக HIV தொற்றைப் பெற்றுக் கொள்கின்றமை மனதை நெருடும் விடயமாகும்.

முதன் முதலில் 1980ஆம் ஆண்டளவில் அமெரிக்காவில் விமானச் சிப்பந்தி ஒருவரிலேயே இந்நோய்க்கான அறிகுறிகள் கண்டறியப்பட்டன. ஆனால் அப்போது இது எயிட்ஸ் எனப் பெயர் பெற்றிருக்கவில்லை. இது ஓரினச் சேர்க்கை (ஒத்த பால் உடையவர்களுடனான உறவு) மூலமே பரவுவதாக நம்பப்பட்டு 'கிரிட்' (GRID) எனப்பெயர் பெற்றது.

அமெரிக்காவில் முதலில் இனங்காணப்பட்ட இந்நோய் அங்கு அதிக தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. காலப்போக்கில் அங்கு மக்களிடையே ஏற்பட்ட விழிப்புணர்வின் மூலம் தற்போது நோயாளர் தொகை குறைவடையத் தொடங்கியுள்ளது. ஆனால் இது பற்றிய போதிய விழிப்புணர்வைப் பெறாத ஆபிரிக்க, ஆசிய நாடுகளில் குறிப்பாக இந்தியா போன்றவற்றில் நோயாளர் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

அதாவது இந் நோயின் தாக்கம் அதிகரித்து வருவதற்கு போதிய விழிப்புணர்வு இன்மையையும்; பாதுகாப்பான பாலியல் பற்றிய அறிவின்மையுமே காரணமாகும்.

AIDS என்ற சொல்லிலுள்ள,

A - Acquired
I - Immune
D - Deficiency
S - Syndrome

அதாவது நோய் எதிர்ப்புச் சக்தி குறைவடைவதால் பெறப்படும் பல்வேறு நோய்களின் கூட்டே எயிட்ஸ் ஆகும். இந்நோயை ஏற்படுத்தும் நோய்க் காரணி HIV எனப்படும் வைரஸ்.

H – Human
I – Immune deficiency
V – Virus

அதாவது மனித நோய் எதிர்ப்பு சக்தியை குறைவடையச் செய்யும் வைரஸ் என்பதாகும். எனவே எமது உடலில் நோய் எதிர்ப்பு சக்தி குறைவடைவதனால் பெறப்படும் பல நோய்களின் கூட்டே எயிட்ஸ் ஆகும்.

## நோய்க் கிருமியின் தாக்கம்

பூரணமாக வளர்ச்சியடைந்த மனிதர் ஒருவரை இந்த HIV எனும் எயிட்ஸ் நோய்க்காரணி ஏதேனும் வழிகளில் தொற்றுகின்ற நாளிலிருந்து (8 – 12) வருடங்கள் வரை அவருக்கு எந்த வித நோய் அறிகுறிகளும் தெரியாது. வெளிப்பார்வைக்கு அவர் சுகதேகி போலவே காட்சிதருவார்.

பொதுவாக ஒரு மனிதனின் ஒரு மில்லிலீற்றர் (1ml) குருதியிலே நோய் எதிர்ப்பு சக்திக்கு பொறுப்பான T4 எனப்படும் கலங்கள் (நிணநீர்க் குழிய வகை) 1500 வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்க வேண்டும். ஆனால் HIV தொற்று ஏற்பட்டதும் அது படிப்படியாக T4 கலங்களை அழித்து ஒரு மில்லி லீற்றரில் இருநூறுக்கு குறைவாக மாறுகிறது. இதற்கு ஏறத்தாழ எட்டு முதல் பன்னிரெண்டு வருடங்கள் எடுக்கும். அத்துடன் HIVயின் தொகையும் அதிகரிக்கும்.

இந்த HIVகள் நிணநீர்க்குழியங்களில் T4 வகைக்குள் புகுந்து இளம் பெருகியபின் T4 கலங்களை அழித்துவிட்டு வெளியேறுகின்றன. இதனாலேயே உடலில் நோய் எதிர்ப்பு சக்தி குறைகின்றது. நோய் எதிர்ப்பு சக்தி குறைய பலநோய்களும் மிக இலகுவாக தொற்றிக் கொள்கின்றன.

இவ்வாறு HIV தொற்றி, நோய் எதிர்ப்பு சக்தி மிகவும் குறைந்து எயிட்ஸிற்கான அறிகுறிகள் தோன்றுதற்கு இடையான காலத்தில், அம் மனிதர் HIV காவியாகவும் தொழிற்படுவார். இவரை "HIV Positive" என அழைப்பர்.

## நோய் அறிகுறிகள்

(HIV Positive) நிலையைத் தாண்டி AIDS எனும் நோய் நிலையை அடைபவர் பின்வரும் அறிகுறிகளில் கணிசமானவற்றைக் கொண்டிருப்பார்.

- காரணமின்றிய கடும் சோர்வு.
- சுரப்பிகள் வீங்குதல் (கழுத்து, அக்குள் பகுதிகளில்)
- காரணமின்றிய தொடர் வயிற்றோட்டம். (ஒரு கிழமைக்கு மேலாக நீடிக்கும்)
- தொடர்ச்சியான காய்ச்சலும், இரவில் கடுமையான வியர்த்தலும்.
- சடுதியான உடல் நிறைக் குறைவு (மாதாந்தம் 10% வரை)
- பசியின்மை.
- தலைமுடி அசாதாரணமாக உதிர்தல்.
- தோல் வியாதிகள்.
- வாயைச் சூழ புண்கள், இளஞ்சிவப்பு பொக்குளங்கள்

என்பன எயிட்ஸ் நிலையில் காணப்படலாம்.

# HIV தொற்றும் வழிகள்

HIV எனும் AIDS இன் நோய்க்காரணி பிரதானமாக பின்வரும் வழிகளில் தொற்றுகின்றது.

- HIV தொற்றுடையவருடனான பாதுகாப்பற்ற பாலியல் தொடர்பு. அதாவது HIV தொற்று உடையவரது பாலியல் திரவங்களில் தொற்றப் போதிய HIVக்கள் காணப்படும். எனவே அவ்வாறானா ஒருவருடன் பாலியல் ரீதியான பாதுகாப்பற்ற தொடர்புகளை மேற்கொள்ளும் போது HIV தொற்று ஏற்படும் வாய்ப்பு உள்ளது.
- HIV தொற்றுடைய குருதிப் பரிமாற்றத்தின் மூலம் தொற்றுகின்றது. அதாவது ஒருவருக்கு குருதிமாற்றீடு செய்கையில் HIVக்கு பரிசோதிக்கப்படாத குருதி ஏற்படும் போது தொற்று ஏற்படும் வாய்ப்பு உள்ளது.
- HIV தொற்று உடையவரின் அங்கமாற்றின் போது அதாவது HIV தொற்று உடையவரது உயிர்க் கலங்களில் இவ் வைரஸ் காணப்படுகின்றது. எனவே அவ்வாறானவரின் அங்கங்கள் வேறொருவருக்கு பொருத்தப்படும்போது தொற்றுதல் அடையும்.
- HIV தொற்றுடைய மருந்தேற்றும் ஊசிகள். அதாவது HIV தொற்றுடைய ஒருவருக்கு பயன்படுத்தப்பட்ட மருந்தேற்றும், போதைவஸ்து பாவனை ஊசி இன்னொருவருக்கு பயன்படுத்தும் போது தொற்றும் வாய்ப்புண்டு.
- HIV தொற்றுடைய தாயிடமிருந்து பிள்ளைக்கு. அதாவது HIV தொற்றுடைய தாய் கர்ப்பம் தரித்து குழந்தையை பிரசவிக்கும் போது (50%) குழந்தை HIV தொற்றுக்கு ஆளாகும் வாய்ப்புண்டு. மேலும், தாய்ப்பாலூட்டும் போது (14%) வாய்ப்பு HIV குழந்தையை அடைவதற்கு உண்டு.

சரியான அறிவும் விழிப்புணர்வும் இருந்தால் இந்நோய் அணுகாமல் பாதுகாக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தடுக்கும் வழிகள்

- மேலெழுந்தவாரியான அல்லது பாதுகாப்பற்ற பாலியல் தொடர்புகளை தவிர்த்தல். அதாவது நம்பிக்கைக்குரிய ஒருவருடன் (கணவன் / மனைவி) மட்டுமே பாலியல் தொடர்புகளை வைத்துக்கொள்ளல்.
- மேற் குறித்த விடயம் தவறும் பட்சத்தில் ஆண் / பெண் பாதுகாப்பு உறைகளை (Condoms) அணிந்து பாலியல் தொடர்புகளை மேற்கொள்ளுதல்.
- பரிசோதனை செய்து HIV இல்லை என உறுதி செய்யப்பட்ட குருதி மாற்றீட்டிற்கே இடமளித்தல். தொற்றற்ற அங்கமாற்றத்தையே மேற்கொள்ளுதல்.
- உரிய முறையில் கிருமிநீக்கப்பட்ட / புதிய ஊசிகள், மருத்துவ உபகரணங்களையே பயன்படுத்த அனுமதித்தல்.
- HIV தொற்றுடைய தாய் கர்ப்பம் தரிப்பதை தவிர்த்தல்.
- பாலியல் நோய்களுக்கு உடன் சிகிச்சை பெறுதல்.

## தொற்றாத வழிகள்

பின்வரும் வழிகளினூடாக HIV தொற்றுவதில்லை.

- சாதாரணமாக முத்தமிடுதல்.
- கைகொடுத்தல், தொடுதல், கட்டியணைத்தல்.
- சாப்பிடும், குடிக்கும் பாத்திரங்களைப் பாவித்தல்.
- நுளம்பு, மற்றும் பூச்சிகளின் கடியினால்.
- நீச்சல் தடாகம், குளம், கடல், ஆறு போன்றவற்றில் குளித்தல்.
- மலசல கூடங்களைப் பாவித்தல்.
- இருமல், தும்முதல் மூலம்.
- ஆடைகளை மாற்றிப் பாவித்தல்.
- ஒரே அலுவலகத்தில் பணியாற்றுதல்.
- நண்பர்களாக இருத்தல்.

போன்ற சாதாரண எந்தவிதமான தொடர்புகளினூடாகவும் HIV தொற்றுவதில்லை.



## நோயாளியைப் பராமரித்தல்

(HIV) தொற்றுடையவரை அல்லது AIDS நோயாளி, பராமரிக்க வேண்டியது குடும்பத்தினதும், சமூகத்தினதும் கடமையாகும்.

HIV தொற்றுடையவர் அல்லது AIDS நோயாளி ஏனையவர்கள் அனுபவிக்கும் அனைத்து உரிமைகளுக்கும் பொருத்தமானவர் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

- தொற்றுடையவரது உணர்வுகளை மதித்தல்
- அவரை ஏற்றுக் கொள்ளுதல்.
- எதிர் காலத்தை சரியான பாதையில் திட்டமிட்டுக் கொடுத்தல்.
- மருத்துவ வசதிகளைச் செய்து கொடுத்தல்.
- சாதாரண நோயாளியைப் போல் கவனமாக பழகுதல்.
- அவரது தேவைகளை நிறைவேற்றிக்கொடுத்தல்.
- உளத் தாக்கத்திலிருந்து விடுபட வழியமைத்தல்.
- மனதில் நம்பிக்கையை ஏற்படுத்துதல்.

என்பனவற்றினூடாக அவரைப் பராமரித்து ஆரோக்கியமான மரணத்தை அடைய உதவியாக இருக்க வேண்டும்.

## HIV / AIDS ஐ உறுதிப்படுத்துதல்

AIDS நோய்க்குரிய அறிகுறிகள் தென்படுமிடத்து அவரை உறுதியாக AIDS நோயாளி என கூறிவிட எவருக்கும் உரிமையில்லை. அது தவறானது.

HIV தொற்று உடையவர் அல்லது AIDS நோயாளி தானாக முன்வந்து வைத்திய சாலையில் HIVக்கான குருதிப் பரிசோதனையை மேற்கொள்வதன் மூலம் மட்டுமே உறுதி செய்யும் பரிசோதனையை மேற்கொள்ள முடியும். இவ் உறுதி செய்யும் பரிசோதனை முடிவுகள் "இரகசியம் காக்கப்படும்" அது அவரது சம்பந்தப்பட்டவருக்கு மட்டுமே அறிவிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் இந்த பரிசோதனையைச் செய்து கொள்ள விரும்பினால் அரச வைத்தியசாலையின் பாலியல் நோய்த் தடுப்பு பிரிவில் சென்று உரிய வைத்தியரை அணுகி பரிசோதனையை மேற்கொள்ளலாம்.

### மாற்றும் மருந்துகள் இல்லை

AIDS ஐ முற்றாக குணப்படுத்த அதாவது HIV கிருமிகளை அழிக்க இதுவரை எந்த விதமான மருந்துகளும் கண்டுபிடிக்கப்படவில்லை என்பதே தெளிவான உண்மை.

HIV இன் தாக்கத்துக்கு உள்ளானவர் அவரது உடலில் காணப்படும் ஏனைய நோய்களைக் கட்டுப்படுத்த சில வகை மருந்துகளை உள்ளெடுக்கலாமே தவிர AIDS ஐ முற்றாக மாற்ற முடியாது.

மேலைத்தேய நாடுகளில் வசதி படைத்தவர்கள் சில வகை மருந்துகளை உபயோகிக்கின்றனர். இம் மருந்துகளும் AIDS ஐ முற்றாக குணப்படுத்துவதில்லை.

அம் மருந்துகள் எமது நாட்டின் பெறுமதியில் ஒரு வருடத்துக்கு எட்டு இலட்சம் முதல் இருபது இலட்சம் வரை செலவாகும்.

எனவே "எயிட்ஸைப் பற்றித் தெரிந்து கொள்ளுங்கள் உங்களைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள்" என்பதற்கேற்ப விழிப்புணர்வுடன் இருந்து வருமுன் காப்பதே சாலச்சிறந்தது.

நாம் பாலியல் கல்வியையும் தெளிவாக பெற்று சரியான வழியில் ஒழுகினால் எம்மை நாமே காத்துக் கொண்டு சமூகத்தின் வளர்ச்சியின் கருவிகளாக வாழலாம்.

"வருமுன் காப்போம்
வளமாக வாழ்வோம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்குசம் ஏந்து!

"அதிகார வெறியர்கள்
அஸ்தியை எடுத்து
ஆழக் குழிதோண்டிப்
புதைக்க வேண்டும்."

பிணந்தின்னும்
கழுகுகளாகவும்
பணந்தேடும்
பிசாசுகளாகவும்
தினந்தோறும் அலையும்
துட்டர் கூட்டத்தையடக்க
அங்குசம் ஏந்து!

அரசியல் இலாபங்களுக்கும்
அற்ப சலுகைகளுக்கும்
சிரசினை விற்றுவிட்டு
சிதைந்துபோய் கிடக்கும்
சீர்கெட்ட உடல்களை
தேடிப் பிடித்து!
தீ மூட்ட வேண்டும்

நாற்காலி மோகத்தில்
நாட்டை விலை கேட்கும்
ஆற்றலில்லா ஜயந்துகளை
அடக்குதற்கு
அங்குசம் ஏந்து!

அடிப்படைவாத
அசடுகளையே
பிடிப்புகளாகக் கொண்டு
பித்துப் பிடித்து
பிதற்றுகின்ற கூட்டங்களை
தொற்று நீக்க வேண்டும்.

துப்பாக்கி இரும்புகளை
துணையாகக் கொண்டு
தப்பான வழியில்
தரணியை ஆளும்
கயவர்களை விரட்ட
அங்குசம் ஏந்து!

போர் வெறி நாய்களாய்
போக்கற்ற இவர்களை
பாரினில் உலவ
"பாஸ்போட்" கொடுத்தது யார்?

இனவாதம் ...............
மதவாதம்..........
இங்கே இவர்களுக்கு
இருக்கிறது அத்திவாரமாக
முரண்பாடுகளை
முயன்று தூண்களாக்கி
அரணமைக்கும்
இப் பாசிசத்தை
இப்போதே அழிக்க
அங்குசம் ஏந்து!

மனிதம் இழந்த
மனித சமுதாயம்
புனிதம் இழந்து
புண்பட்டுக் கிடக்கிறது
இனியாவது.....
மாற்றம் வேண்டும்.

ஒற்றை மனிதனாக
ஒன்றும் செய்ய முடியாதே
என்று ஏங்காதே!
இன்றே எழுந்து
அறிவெனும்
அங்குசம் ஏந்து!!

சூரியன் நிலா
ஈச்சமோட்டை

# நூல் அறிமுகம்



**பத்திரிகை இயல் அடிப்படைகள்**

**நூலாசிரியர்:**
அருள்திரு
ரூபன் மரியாம்பிள்ளை
(ஆசிரியர், பாதுகாவலன்)

**வெளியிடுபவர்:**
ஆசிரியர்

விலை : ரூ 200.00



**வெய்யிலியல்**

**நூலாசிரியர்:**

பேராசிரியர்
நா.ஞானகுமாரன்

**வெளியீடு:**
செல்வம் வெளியீடு
பருத்தித்துறை.

விலை : ரூ. 250.00



# கூரியர் சேவை (Courier Service)

ஏ.டக்ளஸ் ராஜ்குமார்
கிளை நிர்வாகி
ரி.என்.ரி. யாழ்ப்பாணம்.

வர்த்தகத்துறை உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு கூரியர் சேவை (Courier Service) பற்றிய விளக்கம் பாட விதானத்தில் (Syllabus) சேர்க்கப்பட்டுள்ளது. கூரியர் சேவையானது சாதாரண தபால் சேவையிலிருந்து வேறுபடுகிறது. தபால் சேவையானது ஒரு கதவுச் (One Door) சேவையாகும். ஆனால் கூரியர் சேவையானது இரண்டு கதவுச் (Two Doors) சேவையாகும். அதாவது பொதிகள் (Parcels), காகிதங்களை அனுப்புபவரின் (Sender) வீட்டுக் கதவிலிருந்து கிடைக்கப் பெறுபவரின் (Receiver) வீட்டுக்கதவுக்கு மிக விரைவாக கொண்டு சென்று விநியோகித்தலாகும். ஆகவே இதனை Door to door Service என அழைப்பர்.

எல் காகோ பிரைவேற் லிமிட்டெட் ஆனது 1980 களிலிருந்து சர்வதேச கூரியர் சேவையில் சரித்திரம் படைக்கும் TNT யின் இலங்கைக்கான முகவராகத் தொழிற்படுகின்றது. TNT யின் விரிவாக்கம் Thomas Nation Transport ஆகும். நெதர்லாந்தை தலைமையகமாகக் கொண்டிருக்கும் TNT யானது 200 இற்கும் மேற்பட்ட நாடுகளில் 3000 இற்கும் மேற்பட்ட அலுவலகங்களைக் கொண்டு ஒரு வலைப்பின்னலாக (Network) தொழிற்படுகின்றது. இலங்கையில் 9 ஆவது கிளையாக யாழ்ப்பாண TNT காணப்படுகிறது.

மிகத் துரிதமாகவும், அதி கூடிய நம்பகத்தன்மையாகவும் பொதி விநியோக சேவையை ஆற்றுவதே TNT யின் குறிக்கோளாகும். TNT யானது வாடிக்கையாளரை உச்ச திருப்திப்படுத்தும், தரமான சேவையுடைய உலகளாவிய ரீதியில் வழங்கி வருகிறது. பின்வரும் 7 செய்முறைகள் TNT யின் தூரநோக்காக (Vision) இருப்பதுடன் ஒவ்வொருவரும் TNT யின் நோக்கிலே முதல் இடம் (Right first time) கொடுக்கும் சேவையுடனான நோக்கிலும் (any time) பெற்றுக்கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. Winning and Keeping profitable customers.
2. Delivering on time and in perfect condition.
3. Issuing clean invoices and getting paid.
4. Creating and strengthening competitive edge.
5. Recruiting, equipping, developing and empowering people.
6. Ensuring safe and secure working environment.
7. Making money

இச் சேவைக்கும் Computer On Line System பயன்படுத்தப்படுகிறது. அதாவது இங்கிருந்து பொதிகள், காகிதங்கள் அனுப்பப்படும் போது பல தரவுகள் (அனுப்புநர் / பெறுநரின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், அனுப்பப்படும் பொருட்கள் பற்றிய விபரம்) உள்ளீடு (Type) செய்யப்படும். வெளிநாட்டுக்கு அவை சென்றடையும் போது அங்குள்ள TNT அலுவலகங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளது (திகதி, நேரம், பெற்றுக்கொண்டவர் பெயர்) என்பதை System இல் Update செய்யும். இதனை இங்கிருந்து பார்த்து வாடிக்கையாளர்களுக்கு POD (Proof of Delivery) வழங்கப்படுகிறது. இப் POD யினை வாடிக்கையாளர்களும் நேரடியாக அறிந்துகொள்ளலாம். அதாவது வாடிக்கையாளரின் பொதி இலக்கத்தை (Consignment Number) பின்வரும் ஏதேனும் ஒரு முறையில் உள்ளீடு செய்வதன் மூலம் PODயைப் பெற்றுக்கொள்ளலாம்.

1) Internet Tracking - WWW.tnt.com
2) E-mail Tracking - Send message to track@tnt.com
Subject : C
Message (Consignment No) Enter END
3) SMS Tracking - Send 3989 to 7777 (Dialog)
Message: tnt <Space> (Consignment No)
4) Also Available WAP and PDA tracking

யாழ்ப்பாணத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட சேவைகள்

1) சர்வதேச கூரியர் சேவை (International Courier Service) – யாழ்ப்பாணத்திலிருந்து வெளிநாடுகளுக்கு பொருட்கள், காகிதங்களை 3 நாட்களில் அனுப்ப கூடிய சேவை. அதே போன்று வெளிநாட்டிலிருந்து அனுப்புவதை இங்கு பெற்றுக்கொள்ள முடியும்.
2) உள்நாட்டுக் கூரியர் சேவை (Domestic Courier Service) – யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு 24 மணி நேரத்திலும், கொழும்பு தவிர்ந்த ஏனைய மாவட்டங்களுக்கு 36 மணிநேரத்திலும் பொதிகளை விநியோகிக்க கூடிய சேவை.
3) சர்வதேச தபால் சேவை (International Mail Service) – சாதாரண தபால் கட்டணத்தில் 7 - 10 நாட்களில் சென்றடைய கூடிய சர்வதேச தபால் சேவை.



# வஞ்சிக்கப்பட்ட மலர்



படிக்க வேண்டிய
வயதில்
இவன்
வேலைக்குச் சென்றான்!
வீட்டில்
வறுமை இல்லை..
வறுமை தான்
வீடாகிக் கிடந்தது!
வாய் பேசாத்தாய்.
நடக்க முடியாத தந்தை.
பேருக்கு ஒரு
தம்பி.
இவன் மட்டும்
பாலைவனத்தில்
பூத்த ரோஜா.
காலங்கள்
இவனுக்கு
கைகொடுக்காவிட்டாலும்
கண்ணீருக்கு
மட்டும் பஞ்சமில்லை.
இந்த வாழ்வும்,
அழுவதற்காகவே
சிருஷ்டிக்கப்பட்டது!
பருவங்கள்
கடந்து - ஒரு
விளைநிலம்
வெறுந்தரையாக இருக்கிறது.
கல்யாண காட்சியே
கனவாக இருக்கிறது.
காதல் கூட
இவனைக்கண்டால்
தொழுநோயைத்
தொடுவது போல்
தூரவிலகிப் போகிறது!
இவனின்
பாதங்களுக்கு
முன்னாலேயே
தோல்வி
ஓடிக் கொண்டிருக்கும்!
இந்தப்
பாலையில்
பூத்த மலருக்கு,
பெயரில் ஒட்டிய
'நித்தியகல்யாணி' தான்
கடைசிவரையும்
சேர்ந்திருந்தது.
இது வஞ்சிக்கப்பட்ட
மலர்கள். ஆனால் ......
சிலகாலத்தால்
வாஞ்சிக்கப்படும்.

[illegible] 'கஸ்தூரிக் குயில்'
செல்வி தர்மினி கருணாநந்தம்.

நூலகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ENGLISH PARK

**Ha! ...... Hah!,,,,, He! ....He!**

**Hello, This is Pete**

**Hello, Pete – What's on your mind?**

**I'm broke down in Los Angeles and I need a hundred dollars right away.**

**There must be something wrong with the line.**

**I can't hear you.**

**I say, I want to borrow one hundred dollars.**

**I can't hear a word you're saying.**

Operator: (Coming on line)

Hello! This is the operator. I can hear him very plainly.

**Then you give him the hundred Dollars**

# LOVE TRUISMS

**Researchers have broken up love into two main types:**

- Passionate love which involves continuously thinking about the loved one and also involves warm sexual feeling and powerful emotional reactions.
- Companionate love is having trusting and tender feelings for someone who is close to you.

**The three components of the Triangular Theory of Love are:**

Passion, the feeling of being physically aroused and attracted to someone.

Passion is what makes you feel "in love" and is the feeling most associated with love. It also rises quickly and strongly influences and biases your judgment.

Intimacy, the feeling of close and connected to someone (developed through sharing and very good communications over time).

Intimacy is what makes you want to share and offer emotional and material support to each other.

Commitment, pledging to your self and each other to strengthen the feeling of love and to actively maintain the relationship.

Commitment is what makes you want to be serious, have a serious relationship and promise to be there for the other person if things get tough.

**Is there love at first sight?**

This is when we are over whelmed by passion, without any intimacy or commitment (both of which take time). Sternberg calls this infatuated love. Because there is not intimacy or commitment, infatuated love is fated to fade away.

**Why do some people get married after being in love for a very short time?**

This is a combination of passion and commitment, but without any intimacy. Sternberg calls this Hollywood love. This is where two people make a commitment to each other based on their passion. Unless intimacy develops over time, this relationship most likely will end.

**Can their be love without sex?**

Ah yes, companionate love, where intimacy and commitment are present without any sexual passion.

**Why doesn't romantic love last?**

Passion and intimacy without commitment is Romantic love. When the passion fades, and the intimacy wanes, the relationship ends.

**Infatuation vs. Love.**

**Infatuation** is instant desire – one set of glands calling to another.

**Love** is friendship that has caught fire. It takes root and grows, one day at a time.

**Infatuation** is marked by a feeling of insecurity. You are excited and eager, but not genuinely happy. There are nagging doubts, unanswered questions, little bits and pieces about your beloved that you would just as soon not examine too closely. It might spoil the dream.

**Love** is the quiet understanding and mature acceptance of imperfection. It is real. It gives you strength and grows beyond you – to bolster your beloved. Your are warmed by their presence, even when they are away. Miles do not separate you. You have so many wonderful little films in your head that you keep replaying. But near or far, you know they are yours, and you can wait.

**Infatuation** says, "we must get married right away. I can't risk losing them!"

**Love** says, "Be patient. Don't panic. Plan your future with confidence."

**Infatuation** has an element of sexual excitement. Whenever you are together, you hope it will end in intimacy.

**Love** is not based on sex. It is the maturation of friendship, which makes sex so much sweeter. You must be friends before you can be lovers.


**Infatuation** lacks confidence. When they're away, you wonder if they're cheating. Sometimes, you check.

**Love** means trust. You are calm, secure and unthreatened. They feel your trust, and it makes them even more trustworthy.

**Infatuation** might lead you to do things you will regret, but love never steers you in the wrong direction.

**Love** is an upper. It makes you feel whole. It completes the circle. It fills the empty space in your heart. Love is elevating. It lifts you up. It makes you look up. It makes you think up. It makes you a better person than you were before. If you have love in your life it can make up for a great many things you don't have. If there is no love in your life, whatever else there is has a lot less meaning. The secret of human being is not only to live but to have something to live for.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வீட்டுக்காரர் : இன்றைக்குப் பால் கொண்டுவர ஏன் ஐயா இத்தனை நேரம்

பால்காரன் : வழியிலே பால் சோதனை போடறவங்க பிடிச்சுக்கிட்டாங்க

வீட்டுக்காரர் : (ஆவலுடன்) அப்புறம் என்ன ஆயிற்று? ஏதாவது கண்டு பிடிச்சாங்களா?

பால்காரன் : அங்க அதிசயத்தை என்னன்னு சொல்லுவேனுங்க? நான் கொடுக்கிற பாலிலே, பாலும் இருக்குன்னு கண்டுபிடிச்சு என்னை-யே அசரவச்சுட்டாங்க !!



"என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளா-விட்டால் இந்த ஜன்மத்தில் வேறொரு பெண் முகத்தை நான் நிமிர்ந்து பார்ப்பேனென்று நினைக்காதே ஆமாம்"


"அதெல்லாம் சரிதான்...! கல்யாணம் பண்ணிக்கொண்டு விட்டால் அப்புறம் என்ன-வாம்!"




"என்னப்பா இது! இவ்வளவு நேரமா 'ஒன்னு' கத்தி வியாபாரம் பண்ணிக்-கிட்டிருந்தே..... என்னைப் பார்த்த-தும் சட்டுன்னு நிறுத்திட்டே. என்ன விக்கறே?"

"பெல்டுங்க...'

# உஷ்! ஸ்ஸ!!




"இதுக்குத்தான் பக்கத்திலே உட்கார்ந்து தூண்டில் போடாதேன்னு சொன்னேன்"



"அழகும் மூளையும் அபாரமாக இருக்கும் மனைவி வேண்டு-மென்று அலைந்து கடைசியில் என்னைக் கல்யாணம் செய்து கொண்டார்!"

"பாவம்! அலைந்து அலைந்து கடைசியில் அலுத்துப் போயி-ருப்பார்!"



நீதிபதி: பிரதிவாதியை நீ அடித்ததற்-காக உனக்கு ஐந்து ரூபாய் அபராதம்!

வாதி : இந்தாருங்கள் பத்து ரூபாய்!

நீதிபதி : உனக்கு ஐந்து ரூபாய் தானே அபராதம் விதித்தேன் எதற்கு இரட்டிப்பாகக் கட்டுகிறாய்?

வாதி: இருக்கட்டுங்க! அந்தப் பயலை இன்னொரு கை பார்த்து விடுகிறேன்.

[illegible] : எஸ். பிரசாந்தன்
யாழ். பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித நடத்தையை தீர்மானிப்பது

# சூழலா? பரம்பரையா?

ஏ. அகிலதாஸ்
உளவியல்
சிறப்புக்கலை
யாழ். பல்கலைக்கழகம்

உளவியல் மனித நடத்தை பற்றிய அறிவியலாகும். ஒரு மனிதனது நடத்தை அவனது வளர்ச்சியைப் பொறுத்தது. ஒருவனது வளர்ச்சியை பாதிக்கும் காரணிகள் இரண்டாகும். I. மரபுநிலை (Heredity of Nature) II. சூழ்நிலை (Environment of Nature)

நடத்தையை தீர்மானிப்பதில் இவ்விரு காரணிகளில் எது முக்கியமானது என்பது பற்றி உளவியலாளர்களிடையே தீவிர கருத்து முரண்பாடு நிலவுகிறது. ஒருவனது வளர்ச்சியினது இயல்பின் அடிப்படை சூழ்நிலையால் தீர்மானிக்கப்படுகிறது என சூழ்நிலை வாதிகளால் கூறப்படுகிறது. மரபு நிலை வாதிகள், மனித வளர்ச்சியில் மரபு நிலையே பங்குவகிக்கிறது. சூழ்நிலைக் காரணிகள் அல்ல என வாதிடுகின்றனர்.

மரபுநிலை, ஒரு கருவுற்ற முட்டையில் (Fertilized ovum) ஒடுங்கி நிற்கும் எல்லாப் பண்புக் கூறுகளையும் குறிக்கும். பிறப்பிலேயே குழந்தை தன்னுடைய பெற்றோர்கள், முன்னோர்கள் போன்றவர்களிடம் இருந்து பெறும் உள்ளக் கூறுகள், உடல் கூறுகள் (மனவெழுச்சிகள், ரோமங்கள், பாலியல் உணர்வுகள், மார்பகங்கள்) மரபுநிலையால் கிடைத்தவை எனலாம். மரபு நிலையினை உயிரியல் மரபு (Biological Heredity) என்றும் குறிப்பிடலாம். இயல்பு சூழல் சம்பந்தமான பிரச்சனைகள், மெய்யியல் பாங்கினை கொண்டவை. கி.பி. 1600ஆம் ஆண்டளவில் ஜோன் லொக் இது குறித்து பிரஸ்தாபித்துள்ளார். பிறந்த குழந்தையின் மனம், செயற்பாடற்ற வெறும் கரும்பலகை ஆகும் எனவும் சூழலில் கிடைக்கும் அனுபவங்கள் மூலம் வெறும் கரும்பலகை நிறைவு செய்யப்படும் என்றும் கூறப்படுவது, சூழல், மனிதனின் வளர்ச்சியில் செல்வாக்கு செலுத்தும் என்பதை எடுத்துக் காட்டுகிறது. லொக்கின் கருத்திற்கு எதிராக ரூசோ பரம்பரை அலகுகளே மனித வளர்ச்சிக்கு காரணம் என்கிறார். மேலும் மனிதனது உடனான இயல்புகளை சூழல் மோசம் செய்கிறது என கூறுகிறார். பரம்பரை சூழல் குறித்து சர்ச்சைகள் தோன்றியே செய்கின்றன.

குடிவழியாக பெறும் பண்புக்கூறுகளும் பிறவியில் அமைந்த இயற்கைப் பேறுமே ஒரு குழந்தையின் ஆளுமை, நடத்தைக்கு முக்கிய காரணியாக அமைகின்றன. எனவே ஒரு குழந்தைக்கு எவ்வாறான முறையில் பயிற்சியளித்தாலும், கல்வி புகட்டினாலும், அதற்கேற்ப சூழ்நிலைகளை உண்டாக்கினாலும், குடிவழியில் பெறப்பெறாத கவர்ச்சிகளையும் திறன்களையும் உண்டாக்க முடியாது. அதாவது இசையில் ஈடுபடும் திறனற்றவனுக்கு அத்திறனை ஊட்டுவதன் மூலம் சிறந்த இசையாளராக அவனை உருவாக்க முடியாது. குடும்பத்தில் தந்தை இசைக்கலைஞனாக இருக்க மகன் அதில் சிறந்தவனாகி விளங்குவதை காணலாம். இந்த நடத்தைக்கு பரம்பரை Or சூழ்நிலை என்பன காரணமாக இருக்கலாம்.

ஒருவனது வளர்ச்சி, ஆளுமை நடத்தை ஆகியவற்றை உறுதிசெய்வதில் மரபுநிலையின் பங்கு பற்றி பல ஆய்வுகளும் சோதனைகளும் நிகழ்த்தப்பட்டுள்ளன. விலங்கினங்களின் கலப்பின வகைகள் (Hybrids). மரபு நிலையின் முக்கியத்துவத்தை தெளிவாக எடுத்துக் காட்டுகிறன. புத்திக் கூர்மையின் உருவாக்கம் போன்ற விடயங்களில் சூழ்நிலை எவ்விதமான பங்களிப்பும் வகிப்பதில்லை. உடல் ரீதியான செயற்பாட்டுத் திறன்கூட பெரும்பாலும் பரம்பரையின் செயற்பாட்டினால் கிடைக்கக்கூடியதே. ஒருவன் 60மைல் வேகத்தில் ஓட முடியாது. 10 அடி உயரம் வரை வளர முடியாது. இவை பரம்பரையின் செல்வாக்கென குறிப்பிடலாம்.

எல்லாம் உளவியல் பண்புகளும் பரம்பரையோடும் சூழலோடும் பரஸ்பரம் செயலாற்றுவதில் தங்கியுள்ளன. பரம்பரை பழக்கங்கள், பண்புகள் பெற்றோர்களிடமிருந்து பிள்ளைகளுக்கு கடத்தப்படுகிறன. மரபணு மரபு தகவல்களை கொண்டு செல்கிறது. DNA நான்கு நுண் கூறுகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுள்ளது. இவை ஒரு முறுக்கு ஏணிபோல காணப்படுகிறது. Adenine, Guanine, Thymine, Cytocine, ஆகிய நான்கு நுண்கூறுகளும் Sugar, Pospate என்பவற்றை கொண்டிருக்கும். இந்த நான்கு நுண்கூறுகளும் உயிர் வாழ்வதற்கான பண்புகளை கொண்டுள்ளன. இந்த நுண்கூறுகள் அடுக்கிறை ஏ ஆறைகின்ற பொழுது வெவ்வேறு மரபு தகவல்களை தருகின்றன. இதனுடைய பல்வேறு அமைப்புக்களால் ஒருவர் சிறந்த எழுத்தாளராக, புலவராக, உளவியலாளராக வருவார். மனித நிறமூர்த்தம் ஒன்றுகிட்டதட்ட 1000 ஜீன்களை கொண்டுள்ளது. இந்த எண்ணிக்கை கூடுதலாக இருப்பதினால் இரண்டுபேர் ஒரே மாதிரியான பரம்பரை பண்புகளை கொண்டிருப்பது சந்தேகமே. ஒரே மாதிரியான இரட்டையர்கள். இதற்கு விதிவிலக்கு. இவை ஒரே முட்டையில் உருவாகும்.

தனது தாய் தந்தையரின் பாலணுக்களின் சேர்க்கையால் மனிதன் தோன்றுகிறான். ஆண் பாலணுக்கள் Sperms எனவும் பெண் பாலணு Ovum எனவும் பெயர் பெறும். பிறக்கப் போகும் குழந்தையின் மரபுநிலையில் இவ்விரு பாலணுக்களின் செல்வாக்கு ஒரே அளவானதாகும். பாலணுக்கள் 23 Chromosome களை கொண்டுள்ளன. ஒவ்வொரு Chromosomes இலும் பல்லாயிரக் கணக்கான genes காணப்படுகிறன. இவை 'DNA' இரசாயனச் சத்துக்களாகும். தாய் தந்தையிடம் இருந்து குழந்தை Chromosomes, genes களை சரிசமமாக பெறுகின்றது. இவ்விருவர் வழிவந்த இயல்புகள் குழந்தையில் சரிசமமாக காணப்படும். குழந்தை ஆணா பெண்ணா என்பது தந்தையிடம் பெற்ற Chromosome களை பொறுத்தது. கருவுற்ற முட்டையில் காணப்படும் 23சோடி Chromosomesகளில் 23 தந்தையிடம் இருந்து பெறுகிறது. இவற்றில் எல்லாம் "X" ஆக இருப்பின் பெண்ணாகவும் '22X' Chromosomes களாகவும் ஒன்று 'Y' ஆக இருக்குமாயின் பிறக்கும் குழந்தை ஆணாகவும் இருக்கும்.

Gregor mendel, (1822 – 1884) பரம்பரையியலில் பல சோதனைகளை செய்து அவை தொடர்பாக சில முடிவுகளுக்கு வந்துள்ளார். Gene களை ஆதிக்கம் உள்ள



ஜீன்கள் (Dominant Genes). பின்னொதுங்கும் ஜீன்கள் (Recessive Genes) என இருவகையாக கூறுகிறார். Dominant Genes தோற்றுவிக்கப்படும் பரம்பரை இயல்புகள் அடுத்தடுத்த சந்ததிகளில் அதிகரித்துக் கொண்டே செல்லும். ஒதுங்கும் ஜீன்களால் மரபு நிலை பண்புகள் பின்வரும் சந்ததிகளில் குறைந்து கொண்டு செல்லும் என கூறுகிறார்.

மரபு நிலையில் முழு ஒற்றுமை ஒரே தாய் தந்தையரின் பல குழந்தைகளுக்கு இருப்பதில்லை. மரபு நிலையில் முழு ஒற்றுமை ஒரு கருவிரட்டையர்களிடையே (Identicalor monozygotic Tains) காணப்படும். இவர்களை பிரித்து வெவ்வேறு சூழ்நிலைகளில் வளர்க்கப்பட்டாலும் அவர்களது நடத்தையில் முழு ஒற்றுமை காணப்படும். இதிலிருந்து பரம்பரை காரணிகளே செல்வாக்கு செலுத்துகின்றன எனலாம். எடுத்துக்காட்டாக இரட்டை குழந்தைகள் இருவரையும் 21 நாட்களில் இருந்து 22 மாதங்கள் வரை MCGraw என்ற உளவியலாளரால் உற்று நோக்கப்பட்டது. ஒருவருக்கு உடற்பயிற்சி கொடுக்கப்பட்டது. மற்றைய குழந்தைக்கு ஒருவித பயிற்சி கொடுக்கவில்லை. இருந்தும், இவ்விரு குழந்தைகளின் நடத்தை வளர்ச்சி ஒரே நிலையிலேயே இருந்தது. A.Gesen, Thompson. என்போரது ஆய்வுகளும் இதே முடிவுக்கு வந்துள்ளன.

சூழல், மரபு என்பவற்றின் செல்வாக்கினை அறிய சகோதர இரட்டையர்கள் ஒத்த இரட்டையர்களது ஆராய்ச்சி முக்கியமானது. நமது வளர்ச்சியில் சூழலின் பங்களிப்பை நோக்குவோம். பௌதீக சூழல், சமூகச்சூழல் என சூழல் இரண்டு வகைப்படும். நமது வளர்ச்சி நடத்தையை கட்டுப்படுத்தும் காரணிகள் சூழ்நிலை என்பர். சூழலி, தாயின் வயிற்றில் இருக்கும் போது அது பிறப்பிற்கு முன்னான சூழல் எனப்படும். குழவி வயிற்றிலிருக்கும் தாய் தீவிரமனவெழுச்சிக்குட்படும் போதும் போதைப் பொருட்களை பாவிப்பதாலும் தாயின் உணவு வகைகள் குழவியின் ஆரோக்கியத்தை பாதிக்கும்.

குழந்தை பிறந்த பின்னர் ஏற்படும் பாதிப்பு, பிறப்புக்கு பின் உள்ள சூழ்நிலை எனப்படும். குறிப்பாக சமூகக் காரணிகளை குறிப்பிடலாம். சூழ்நிலையில் பல சிக்கல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றது. குடும்பத்தில் உட்காரணிகளும் உண்டு. ஒரே குடும்பத்தில் அண்ணன், தம்பிக்கிடையே ஒரே சம தன்மை காணப்படாது. அண்ணன் தம்பிமீது ஆதிக்கம் செலுத்துவான், எனவே குடும்ப சூழல் இருவரிடையேயும் மாறுபட்டு காணப்படும்.

சூழ்நிலையின் செல்வாக்கினை ஆராய்ச்சிகள் புலப்படுத்தும். LySenko எனும் அறிஞர் Gene களின் அமைப்பை மாற்றி அதன் மீதுள்ள பண்புகளை மாற்ற முடியும் என்கிறார். Golten என்பவர் மேதைகள் தோன்ற காரணம், நாட்டில் நல்ல சூழ்நிலைகளே என்கிறார். சூழ்நிலை காரணிகள் எப்படி மனித நடத்தை மற்றும் உணர்வுகளை மாற்றும் என்பது தொடர்பாக ஒத்த இரட்டையர்களை வைத்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் வெற்றியளித்துள்ளன. அமெரிக்காவில் I owa என்பவரால் ஒரே நுண்ணறிவுள்ள 2,3 வயதுள்ள பிள்ளைகளை இரு கூறாகப்பிரித்து ஒரு குழந்தை பல்கலைக்கழக சார் கல்விச் சூழ்நிலையிலும் மற்றைய பிள்ளை சாதாரண சூழ்நிலையிலும் வளர்க்கப்பட்டன. சில ஆண்டின் பின் சராசரி நுண்ணறிவை ஆராய்ந்த போது சாதாரண சூழ்நிலையில் வளர்க்கப்பட்ட பிள்ளையின் நுண்ணறிவு ஈவு அதிகரித்து காணப்பட்டது.

மனிதனது உருவ அமைப்பும் சூழ்நிலைக் காரணிகளால் உருவாக்கப்படுவதாகும் என சில சூழ்நிலைவாதிகள் கருதுகின்றனர். பாக்லி (W.C.Bagley) J.P.வாட்சன் போன்றோரும் சூழ்நிலையின் முக்கியத்துவத்தை ஆதரிக்கின்றனர். பல பரம்பரைப் பண்புகள் சூழ்நிலையால் மாற்றலாம். நீரிழிவு நோய் பரம்பரையால் ஏற்படும். சிலவேளை வராமலும் விடலாம். ஆனால் இதனை சூழ்நிலைக்கேற்றவாறு மாற்றியமைக்கலாம். குழந்தைகள் குற்றவாளிகளாக மாறுவதற்கு சூழ்நிலை முக்கிய காரணம். ஸ்ரில்பாட் (Cyrilburt) கூறுகிறார். "இழிகுடும்பங்கள் வறுமை, கட்டுப்பாடின்மை, கூடாநட்பு ஆகியவை கொண்ட சூழ்நிலையில் வளரும் குழந்தைகள் நெறி பிறழ்வு அடைவதாக ஆய்வுகள் கூறுகின்றன."

தற்காலத்தில் பரம்பரையும் சூழலும் ஒருவரின் நடத்தையை தீர்மானிப்பதாக பல அறிஞர்கள் கூறுகின்றார்கள்.



ஒருவர் தான் விரும்பியோ விரும்பாமலோ பரம்பரை பண்புகளால் செயற்படுத்தப்படுகிறார். ஒரு மொட்டு பருத்து விரிந்து பூவாது போல ஒரு குழந்தையும் தவண்டு எழுந்து நடந்து ஓடும். இது ஒரு படிமுறை செயலாக காணப்படுகிறது. எனவே குழந்தையினுள் முதிர்ச்சித் தன்மைகள் ஏற்கனவே இருக்கின்றன. அக்குழந்தை வளர வளர மரபினூடாக அது பரம்பரை பண்புகளையும் குணம் குறிகளையும் பெற்று தோற்றத்திலும் குணாதிசயங்களிலும் அவர்கள் சார்பாக விளங்கும்.

எமது வாழ்வின் விருத்தி நிலைகளை தீர்மானிக்கும் காரணிகள், சூழல் மூலமாக எமக்கும் மற்றவர்களுக்கும் ஏற்படும் இடைவினைகளும் கற்றலும் ஆகும் என்கின்றனர். Glen Domaris என்பவரின் கருத்துபடி எந்த குழந்தையும் எடுத்து விசேட உரிய சூழலில் வளர்க்கப்பட்டால் சிறந்த இசையமைப்பாளராக உருவாக்கலாம் என்கிறார். Robert Graham என்பவர் தெரிந்தெடுக்கப்பட்ட நல்ல முட்டையையும் விந்தையும் கொண்டு இனப்பெருக்கத்தின் வழியாக நல்ல இனங்களை உருவாக்கலாம் என்கிறார். இப்படி மனித நடத்தைக்கு சூழலும் மரபும் காரணம் என்கின்றனர். தற்காலத்தில் இவ்விரு காரணிகளுமே மனித நடத்தையில் செல்வாக்கு செலுத்துகின்றது என்கின்றனர். Plomin (1989) Vasta Haith and miller (1992) போன்றோர் இக்கருத்தை முன்வைத்தனர்.

'ஈராக் சுதந்திரத்துக்கான நடவடிக்கை' எனக்கூறி ஈராக் அதிபர் சதாம் ஹுசைனை பதவியில் இருந்து அகற்றுவதற்காக 20-03-2003இல் அமெரிக்கத் துருப்புகள் ஈராக் மீதான பெரும் தாக்குதலை ஆரம்பித்தன. பிரிட்டிஷ் படைகளுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட இப்படை நடவடிக்கைக்கு 'அதிர்ச்சியும் ஆச்சரியமும்' (Shock & awe) எனப் பெயரிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாவும் கற்பனை

சிறுகதை

சிவா- ஜெயகாந்த்
தமிழ்
சிறப்புக் கலை
யாழ் பல்கலைக்கழகம்
II

உண்மையில் வசந்தியால் அழவே முடியவில்லை. வலிந்து அழுததால் வயிறு புண்பட்டதே தவிர அவள் கண்களிலிருந்தும் ஒரு துளி நீரேனும் கசியவில்லை. எப்படித்தான் அவள் கண்களில் இருந்து கண்ணீர் சொட்டும்? அழுகை என்பது அவள் வாழ்வின் புதிய அத்தியாயங்கள் அல்லவே! பருவமழை காலம் மாறலாம். ஆனால் அவள் விழிகளின் கோலம் "உனக்கு எப்பிடிச் சொன்னாலும் ஏறவேமாட்டுது போ! போடி, உன்ர கொப்பன் பென்சன் எடுகின்றார்தானே! அதில கொஞ்சம் வாங்கி வந்தா குறைஞ்சா போயிடுவா! உன்ன என்னோட தள்ளிவிட்டபோது, என்னடி சீர்வரிச தந்து கிழிச்சவ! ஒரு மாதிரி தரித்திரம் தொலைஞ்சு போகட்டுமென்டு என்ர தலையில தள்ளி விட்டினம்" இப்ப நான் படுற இழவு......"

அது வசந்தியின் கணவன் ராமுவின் தினசரி திருப்பள்ளி எழுச்சி.

வசந்தி வழமை போலவே மௌனமாய் இருந்தாள். அவளுடைய நெஞ்சினுள் ஆயிரம் எரிமலைகள் குமுறியபடி.....

அவளுடைய மௌனம் அவன் கோபத்தை அதிகரிக்கவே

"சொல்லுறது காதில ஏறுதில்லையோ? சனியனே!" என்று கூறி அவள் தலைமயிரை பிடித்து இழுத்தான்.

அவனின் அதிகார வெறி அவள் கூந்தலில் அரங்கேறியது.



இன்று வசந்தி வீட்டிலும் ஓர் துச்சாதனன். ஆனால், பாஞ்சாலியின் பாடுதான் சிரமமாகிவிட்டது.

திருமணமான ஆரம்ப காலத்தில் எல்லோரைப் போலவும் வசந்தியின் வாழ்வும் டாம்பீகமாகத்தான் இருந்தது. அப்போது அவளுக்கு கொடுத்த சீதனம் நகை நட்டுகள் என்று பல இருந்தன. நல்ல சாதுவான கணவன். குடிவெறி இல்லை. கூட்டுறவுச் சங்கத்தில் முகாமையாளர். அன்பான அரவணைப்பு. இதைவிட ஓர் இல்லாளுக்கு வேறென்ன வேண்டும்.

கடந்து போன காலங்கள் அவளுக்கும் இன்பமாய்த்தான் இருந்தன. ஆனால் இப்போதைய நிலைதான் வசந்தியை அடிமைப் பெண் பட்டியலில் இணைத்துவிட்டது.

"எங்கே சாப்பாடு, அதையாவது வந்து போட்டுத் தொலையேன்!" அது கணவனின் கர்ச்சிப்பு.

எங்கோ ஓர் மூலையில் ஒடுங்கிப் போயிருந்த வசந்திக்கு அது கேட்கவில்லை. உண்மையில் வசந்தியின் உள்ளம் மட்டுமல்ல வாழ்வே மரத்துவிட்டது. பெண்களைப் பார்த்துப் பேயும் இரங்கியது அந்தகாலம். ஆனால் இந்த இருபத்தொராம் நூற்றாண்டில்....... ஒன்றுமோ அவளுக்குப் புரியவில்லை.

"சொல்லுறது காதில விழவில்லையோ! வாடி இஞ்ச" மீண்டு கணவன் கர்ச்சித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றுயிராய்க் கிடந்தவளுக்கு செவிப்பறைச் சுவர்களின் அதிர்வை சற்று உள்வாங்க முடிந்தது. தலையைத் திருப்பிப் பார்த்தாள். சாப்பாட்டு மேசையில் தன் கணவன் இருப்பதைக் கண்டாள்.

உடனே அவசரமாய் எழுந்து தன் முந்தானையால் முகத்தினை ஒற்றிய படியே எழுந்து சாப்பாட்டு மேசையை நோக்கி நடந்தாள்.

சாப்பாடு பரிமாறப்பட்டது. சாப்பாட்டை வாயில் வைத்தவன் "இதென்ன..... சாப்பாடு மாதிரியா பண்ணி வச்சிருக்க! இந்தா நீயே வச்சு சாப்பிடு நான் எங்கியாவது கடைக்குப் போறன்"

என்று கூறி சாப்பாட்டுத் தட்டை அப்புறம் தள்ளி குவளையில் இருந்த நீரை குடித்துவிட்டு வேகமாய் வெளியே சென்றான்.

வசந்தி அப்படியே சாப்பாட்டு மேசையில் அமர்ந்தாள். இது என்ன வாழ்க்கை? ஏன்தான் நான் பிறந்தேனோ? நான் முற்பிறப்பில் என்ன பாவம் செய்தேனோ? என்வாழ்வே இப்படியா போகவேண்டும். என் பள்ளிப் பருவத்தில் தந்தை தடுத்ததால் படிப்பை இழந்தேன். என்னை கவனமாய் படிப்பித்திருந்தால் எனக்கேன் இன்று இந்த நிலை. நானும் மற்றவர்களைப் போல் அரசாங்க உத்தியோகம் பார்த்துச் சம்பளம் எடுத்தால் இன்று ஏன் இப்படி எல்லாம் சித்திர-வதைப்படுவான். அல்லது நானும் ஒரு ஆண்பிள்ளையாய் பிறந்திருந்தால் .......

இப்படியாக அவளுடைய ஆதங்கங்கள் அவளுள்ளே பெருகிக் கொண்டிருந்தன. அவள் பல தடவைகள் நான் செத்தால் என்ன என்று கூட யோசித்திருக்கிறாள். ஆனால் அவளுடைய பிள்ளையை நினைக்கும் போதுதான் அவள் தன் எண்ணத்தை மாற்றிக் கொள்வாள்.

வசந்தியின் மகள் சோபனா. எட்டாம் வகுப்புப் படிக்கிறாள். இப்போ அவள் பள்ளிக்குச் சென்றுவிட்டாள்.

அவள் போன பிற்பாடுதான் இங்கே இந்தளவு பிரளயமும் நடக்கும்.

வசந்தியின் மாமியும் பொல்லாதவள். எந்த நேரமும் வசந்தியைத் திட்டினபடிதான். வசந்தியின் மாமன் மாமியார் வெளியூரில் இருக்கிறார்கள். இப்போது ஒருவாரமாய் மாமியார் மட்டும் இங்கே மகனோடு வந்து நிற்கிறார். இன்னும் இரண்டொரு தினங்களில் சென்றுவிடுவாள். இப்போது மாமி-யாரும் கோயிலுக்குச் சென்றுவிட்டார். அவளும் வசந்தியை அடிக்கடி "உன்னை மாதிரியே! பெட்டைக் கழுதையை பெத்து வச்சிருக்கிற" என்று வசந்தியைப் பேசுவாள்.

அதற்கு வசந்தி "ஏன் மாமி அப்படியெல்லாம் சொல்-லுறியள் பெண் பிள்ளை என்றால் என்ன அவ்வளவு கேவலமா? ஏன் மாமி! நீங்களும் ஒரு பெண்தானே" நீங்களே இப்படிச் சொன்னா....."

"என்னையே எதிர்த்தா கதைக்கிறாய்? உனக்கு அவ்வளவு வாய்க்கொழுப்பு. வரட்டும் அவன்" என்று கூறி வசந்தியின் கணவன் வந்ததும் அவனிடம் இல்லாத பொல்லாத எல்லாவற்றையும் கூறுவாள். அப்புறம் என்ன அன்று ஒரே சங்காரந்தான்.

இப்போது மாமியார் ஊருக்குப் போய்விட்டார். தாய் வீட்டில் நிற்கும் போது அவர் குடிப்பதில்லை. இப்ப கடன் வாங்கி குடிச்சிட்டு வந்து வசந்தி பிள்ளை இருவருக்கும் அடிதான்.

அம்மாவிற்கு அடிப்பதைப் பார்த்துக்கொண்டு நின்ற சோபனா "அப்பா! அப்பா! அம்மாவுக்கு அடிக்காதேங்கோ...." என்று வீரிட்டு அழுதாள். "ஓ! நீயும் அவளை மாதிரியே பழகிற பழக்கம். அஞ்சு வீடு கேக்க தொண்டை கிழியிறதுக்கு" என்று கூறி அவளுக்கும் அடிப்பாள்.

அவளும் வசந்தி அந்தப் படிக்கட்டில் அமர்ந்திருந்தாள். அவள் முகத்தில் சந்தோசம் என்பதே கிடையாது. திருமணமான

[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரிரு மாதங்களோடு தொலைந்துபோன அந்த மகிழ்ச்சியை அவளால் இப்போது எண்ணிக்கூடப் பார்க்க முடியாது.

முடிவில்லாத தொடர்கதைபோல் அவள் வாழ்க்கை. கையில் படி அருகே மல்லிகை கொடி படர்ந்திருந்தது. மந்தியான வெயிலினால் அது வாடிப்போய் இருந்தது. அதன் கீழே ஏராளமான உதிர்ந்த மல்லிகைப் புஷ்பங்கள் மணமிழந்து நிறம் திரிந்து போன வசந்தியின் வாழ்வு போல் கிடந்தன.

அப்போது வாசல்படலை திறக்கும் சத்தம் கேட்டது. வாசலிலே அவள் மகள் சோபனா வந்து கொண்டிருந்தாள்.

சோபனாவின் முகத்திலும் இப்போது கவலைக்குறியே தோய்ந்திருப்பதை அவளால் உணர முடிந்தது. முன்பெல்லாம் சோபனா சின்னப்பிள்ளை. அவளுக்கு ஒன்றும் விளங்காது. இப்போது ஓரளவு அவளுக்கு எல்லாம் தெரியும்.

வசந்தியின் தாய் தந்தையரும் வசந்தி வீட்டிற்கு வந்து போவதில்லை. அவளுடைய சகோதரர்களும் அப்படித்தான். ஏனெனில் அவர்கள் வசதியாக இருக்கிறார்கள். வசந்தி வீட்டுக்குச் சென்றால் அவளுக்கு ஏதாவது பணம் கொடுக்க நேரிடுமே. வசந்தியின் தாய் தந்தையர் கூட மற்றைய பேரப்பிள்ளைகளை அன்போடு தூக்கி அணைப்பார்கள். ஆனால் சோபனாவை அப்படி ஒருநாள் கூட ஆசையோடு தூக்குவதே கிடையாது.

வசந்திக்குத் திருமணமாகி சோபனா பிறந்த புதிசில வசந்தியும் ஓரளவு வசதியாய் இருந்தவள்தான். அப்போது வசந்தியின் தாய், தந்தையர் சகோதரங்கள் மற்றும் உறவினர் யாவரும் நல்ல கொண்டாட்டம் தான். பின்னர் ராமுவிற்கும் ஏதோ காசுப் பிரச்சனையால் கூட்டுறவுச் சங்கத்தில் வேலையும் இல்லாமல் போக அவர்களுக்கு கஸ்ரம் வந்ததும் எல்லா உறவுகளும் கலைந்து விட்டன. 'பழங்கள் இருக்கும் விருட்சங்களைத் தானே பறவைகளும் நாடும்'.

அருகில் வந்த சோபனாவை அணைத்து உச்சி மோந்தாள் வசந்தி. தன்னைப் போன்றே இவளும் கஸ்ரப்படக்-



கூடாது. இவளையாவது கவனமாய் வளர்த்தெடுப்போம் என்ற முயற்சியும் வசந்தியிடம் இப்போது இல்லை.

"என்னம்மா கையில காயம்" என்றாள் சோபனா.

"ஆ.... அதுவா உலைவைக்கும் போது கொதித்தண்ணி தவறுதலாக பட்டிட்டுது" என்று படபடப்புடன் கூறிய வசந்தி தன் சேலையால் முகத்தை சுற்றிக்கொண்டாள். அது அவள் புருஷன் குடித்துவிட்டு வந்து அடித்ததால உருவான காயமென சோபனாவால் உணர முடியவில்லை. என்ன இருந்தாலும் அவள் சிறுமிதானே. கொஞ்சம் "கவனமாப் வடிக்க கூடாதா அம்மா! பாக்க எவ்வளவு பெரிசா இருக்கு. எவ்வளவு நோகும் உங்களுக்கு"

என்று கூறினாள் சோபனா. எதையோ நினைத்து வசந்தியின் உதடுகள் வரட்சியான புன்னகையைக் காட்டின.

ஏராளமான நாவல்கள் சிறுகதைகள் என்பவற்றின் முடிவுகளைப் போலவே வசந்தியும் சற்று வித்தியாசமான முடிவை எடுத்தாள்.

தான் செய்வது சரியோ, தவறோ? இதை இன்றைய சமுதாயம் ஏற்குமோ ஏற்காதோ? இப்படியாக ஆயிரம் சிந்தனைப் பிசாசுகள் அவள் உள்ளத்தில் தலைவிரித்தாடின.

அருகே தன்னோடு கிடந்த ஓர் போத்தலை எடுத்தாள். அப்போத்தல் வேறொன்றுமல்ல. விசப் போத்தல் தான்.

இப்போது வசந்திக்கு விசம் குடிப்பது பிரச்சனை அல்ல. அதைத் தான் மட்டும் குடிப்பதா? அல்லது தன் பிள்ளைக்கும் கொடுப்பதா? என்பது தான் பிரச்சனை.

அவளுக்கு நிச்சயமாக ஒன்று மட்டும் தெரியும் தானும் இறந்த பிறகு தன் மகளைப் பார்ப்பதற்கு யாரும் இல்லை என்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவாறு மனதில் தைரியத்தை வரவழைத்த வசந்தி போத்தலின் மூடியைத் திறந்தாள்.

"என்ன போத்தலம்மா இது" ஆவலாய் கேட்டாள் சோபனா.

"இது... இதுவா அம்மா? உனக்கு சனி பிடிக்கிற நேரத்தில் தருவேன் அந்த மருந்து" என்று தளதளத்த குரலிலே கூறினாள் வசந்தி

"அம்மா எனக்கு இப்போ தடிமன் இல்லையேம்மா!"

"பரவாயில்லை பிள்ள குடிச்சா நல்லதுதானே இனிமேல் தடிமன் வராது"

"சரி தாம்மா நான் குடிக்கிறேன்"

சோபனாக்கு மருந்து வாயினுள்விடப்பட்டது. அனேகமாக துன்பப்படும் நாட்களில் வரமுடியாமல் ஸ்தம்பிதம் அடைந்து நிற்கும் கண்ணீர் அந்தக் கணத்தில் வசந்தியின் விழிகளில் வழிந்தோடியது.

மறுநிமிடம் மிகுதி அனைத்தையும் வாங்கி "மடக்" "மடக்" என்று பருகினாள் வசந்தி.

வசந்தி தன்மகளை இறுகக் கட்டி அணைத்துக் கொண்டாள்.

அ... அம்மா... எனக்கு ஏதோ செ... செய்யுது தலையெல்லா....ம் கி... கிறுகிறுக்கிறது. எ.... எனக்குத் தெ...தெரியும் இது.. மருந்தில்ல வி... விசம் என்டு" எங்கே என்னை வி...விட்டு தனியா நீ... போய்விடுவியோ.... சோபனாவின் வார்த்தைகள் துண்டித்தன. ஆனால் அவள் கூறியது வசந்தியின் செவிகளுள் விழுமுன்னமே அவள் உயிர் அவளைவிட்டுப் பிரிந்துவிட்டது.

இப்போது இருவரது உடல்களும் வீட்டு வாசற்படியில் அசைவற்றுக் கிடந்தன. அந்த வெற்றுப் போத்தல் மட்டும் மெல்ல அசைந்து கொண்டிருந்தது.



இப்படியாக கதையை எழுதி முடித்தாள் வனிதா. இக் கதை அனைத்துலக மகளிர் போட்டிக்காக எழுதப்பட்டது. சிறுகதைக்கான முக்கிய நிபந்தனை உண்மைச் சம்பவமாகவோ அல்லது குறிப்பிட்ட ஒருவரது வாழ்க்கை வரலாற்றைச் சுட்டிக் காட்டுவதாகவோ அமையக்கூடாது. யாவும் கற்பனையான சிறுகதையாக இருக்கவேண்டும் என்பதே.

வனிதாவும் அதற்கேற்ப கதையை எழுதி முடித்தாள். ஆனால் அவள் வரைந்த சிறுகதையில் 'யாவும் கற்பனை' என்ற சிறுகதையின் தலைப்பு மட்டுமே கற்பனை மற்றைய விடயங்கள் யாவும் அவளுடைய சொந்த வாழ்க்கைப் பிரச்சினை.

பாத்திரங்கள் யாவும் உண்மையானவை ஆனால் பாத்திரத்தின் பெயர்களே கற்பனையானவை.

வனிதாவைப் பொறுத்தவரையில் கற்பனைவாதத்தில் மனத்திற்கு இதமானவற்றை சிறுகதையில் வடிப்பதென்பது சரிவராத ஒன்று.

நடைமுறை வாழ்வை அதன் உள்ளார்ந்த பண்புகளோடு இலக்கியத்திற்கு இட்டு வருவதே இலக்கியம். நடப்பியலைக் கூறுவதே நல்லதோர் சிறுகதை.

ஆனால் போட்டியில் பரிசில் கிடைக்க வேண்டும் என்பதற்காக மட்டுமே சிறுகதையின் முடிவை அவ்வாறு எழுதினாள்.

"அம்மா.....!" இப்போது வனிதாவின் மகள் பாடசாலை முடிந்து ஓடிவந்து கொண்டிருந்தாள்.

"வாம்மா காஞ்சனா! "என்று வாரி அணைத்தவளைக் கூட்டிச் சென்று மதிய உணவினை அன்போடு பரிமாறினாள்.

நாழிகைகள் நகர்ந்தன. இப்போது வனிதாவின் கணவன் சுந்தரம் வீட்டினுள்ளே வந்தான்.

சில நிமிடங்களில் சுந்தரம் ராமுவானான்; வனிதா வசந்தியானாள்; சோபனாவானாள் காஞ்சனா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதங்கள் சில நகர்ந்தன. இனியும் கணவனின் துன்பங்களைத் தாங்க முடியாத வனிதா தன் கணவன் வீட்டைவிட்டுப் புறப்படுற நேரம் பார்த்து தன் பிள்ளையையும் கூட்டிக் கொண்டு புறப்பட தயாரானாள்.

அவளுடைய நண்பி ஒருத்தி கொழும்பில் வசிக்கிறாள். அவள் வனிதாவை தன்னுடன் வந்து இருக்கும் படி எப்போதும் கூறுவாள்,

அவள் திருமணம் செய்யவில்லை. சந்தோசமாய் வாழ்ந்து வருகிறாள். சில அனாதைப் பிள்ளைகளை வளர்த்து வருகிறாள்.

வனிதாவும் கொழும்புக்கு செல்வதென்றே முடிவாகத் தீர்மானித்து விட்டாள். இப்போது புகைவண்டியில் செல்லப் பணம்தான் இல்லை. கழுத்தில் ஒரு மஞ்சள் நூலைத் தவிர வேறெதுவும் இல்லை.

அப்போது படலையில் யாரோ பெல் அடிக்கும் சத்தம் கேட்டது. தபால்காரன் நின்றுகொண்டிருந்தான். "அம்மா! மணிஆடர் வந்திருக்கு மூவாயிரம் ரூபா" "மூவாயிரமா? எனக்கு யார் அனுப்புவது" "மகளிர் நலன் பிரிவிலிருந்து வந்திருக்கம்மா"

அப்போதுதான் வனிதாவிற்கு தான் வரைந்த சிறுகதை ஞாபகத்திற்கு வந்தது.


சிறுகதையின் முடிவை மாற்றி அதை ஓர் மறுமலர்ச்சியான தொடர்கதையாக்கும் எண்ணத்துடன் புகைவண்டியில் ஏறினாள் வனிதா.

அப்போ அருகிலிருந்த காஞ்சனா "அம்மா எனக்குத் தெரியும் நாங்கள் கூடாத அப்பாவை விட்டிட்டு கொழும்புச் சித்தியிடம் போகிறோம்" என்றாள். "அப்படி கூடாத அப்பா என்று சொல்லா....." என்று வாய் எடுத்தவள் இடையில் வார்த்தைகள் அறுபட மௌனமாய் புகைவண்டி ஆசனத்தில் சாய்ந்தாள்.

(முற்றும்)

# கோழிவளர்ப்பு முறைகள்:

சுயதொழில் வழிகாட்டி



ஏ. ஹென்றி
(ஆசிரியர், சென்ஜோன்ஸ் கல்லூரி)

கோழி வளர்ப்பை மேற்கொள்ளும் போது நாம் வளர்க்க எத்தனிக்கும் கோழிகளின் இனம், எண்ணிக்கை நோக்கம், மூலதனவசதி, இடவசதி போன்ற பல்வேறு காரணிகளை கருத்தில் கொண்டு வளர்க்கும் முறையினை தெரிவு செய்யலாம். பொதுவாக கோழிவளர்ப்பு முறைகளை மூன்றாக வகுக்கலாம் அவையாவன.

I. திறந்த வெளி வளர்ப்பு.
II. செறிவான வளர்ப்பு.
III. பகுதிப்பட்ட செறிவான வளர்ப்பு.

## திறந்த வெளிவளர்ப்பு

இதனை சுயாதீன வளர்ப்பு முறை எனவும் குறிப்பதுண்டு. ஆரம்ப காலங்களில் கோழிகள் இம்முறையிலேயே வளர்க்கப்பட்டு வந்தன. இம் முறையில் பெருமளவு நிலப்பரப்பு தேவைப்படும். ஒரு ஹெக்ரெயர் நிலப்பரப்பில் 300-400 முட்டையிடும் கோழிகளையும் 600-800 வரையிலான வளரும் பறவைகளையும் வளர்க்கலாம். இரவு வேளைகளில் கோழிகள் தங்குவதற்கு கூடு அமைக்கப்பட வேண்டும்.

இதன் அனுகூலங்களும், பிரதிகூலங்களும்

| அனுகூலங்கள் | பிரதிகூலங்கள் |
|---|---|
| 1. உணவிற்கான செலவு குறைவாகும் | 1. கூடியளவு இடப்பரப்புத் தேவைப்படும். |
| 2. கூடமைப்புக்கான செலவு குறைவானதாகும். | 2. ஊழியத் தேவை அதிகமானது |
| 3. குறைபாட்டு நோய்களுக்கான சாத்தியம் குறைவானது | 3. ஒட்டுண்ணித் தொற்றுதலுக்குரிய சாத்தியக்கூறுகள் கூடுதலானது |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 4. முட்டைகள் பருமனில் பெரியனவாகும். | 4. சூழல் காரணிகளால் பாதிப்பு ஏற்படுவதற்கான சாத்தியம் உண்டு |
| 5. மஞ்சள் கரு, கூடிய நிறம் கொண்டது. | 5. உணவுக் குறைபாட்டினால் சேதம் ஏற்படுவதற்கான சாத்தியம். |
| 6. சூரிய ஒளியை பயன்படுத்தக் கூடியதாயிருக்கும் | 6. குறித்த இடங்களில் முட்டைகள் இடப்படாததால் சேகரிப்பது கடினமாகும். |
| 7. குஞ்சு பொரிக்கும் திறன் கூடுதலாக இருக்கும். | 7. இலை குழைகள் பெருமளவு உண்ணப்படுவதனால் "செறிதீன்" வீணடிக்கப்படுவதற்கான சந்தர்ப்பம் குறைவு. |
| 8. போதியளவு உடற்பயிற்சி கிடைக்கும். | |

**பகுதி செறிவான வளர்ப்பு**

இவ் வளர்ப்பு முறையில் இரவில் ஒழுங்காக அமைக்கப்பட்ட கூடுகளில் வளர்ப்பதுடன் பகல் வேளைகளில் இவற்றுடன் தொடர்பான ஒழுங்கான பாதுகாப்பு எல்லைகளிடப்-பட்ட வெளிகளில் கோழிகள் மேய அனுமதிக்கப்படும். கூட்டினுள் பறவை ஒன்றுக்கு ½ - ¾ மீற்றர் சதுரயிலான இடப்பரப்பு வழங்கப்படும். மேலும் கூட்டினுள் நீரும் தீனும் வைக்கப்படும். தீனானது செறிதீன் உணவாக இருக்கும்.

இம் முறையிலான அனுகூலங்களும் பிரதிகூலங்களும்.

| அனுகூலங்கள் | பிரதிகூலங்கள் |
|---|---|
| 1. உணவுக்கான செலவு குறைவாகும் | 1. திறந்த வெளி வளர்ப்பு முறையிலும் பார்க்க செலவு கூடியதாகும். |
| 2. இலை குழைகள் உண்ணப்படுவதால் மஞ்சள் கருநிறம் கூடியதாக இருக்கும். | 2. ஒட்டுண்ணித்தாக்கம் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் அதிகம். |
| 3. முட்டைகள் இலகுவாக சேகரிக்கப்படும். | 3. கூடியளவு இடத்தேவை ஏற்படும். |
| 4. செறிதீன் வழங்கப்படுவதால் உற்பத்தி திறன் கூடுதலாகும். | |

**செறிவான வளர்ப்பு முறை**

இம் முறையில் வாழ்க்கைக் காலம் முழுவதும் பறவைகள் (கோழிகள்) கூட்டுக்குள்ளேயே பேணப்படும். இதில் 2 முறைகள் கையாளப்படுகின்றது.



1. கனகூள வளர்ப்பு முறை
2. தனிக்கல முறை

**கனகூள வளர்ப்பு முறை**

இவ்வளர்ப்பு முறையில் பறவைகள் தமது வாழ்க்கைக் காலம் முழுவதும் அடைப்பொன்றுள் பேணப்படும். இங்கு அடைப்பின் அடியில் கனமான படையாக கூளம் இடப்படு-வதனால் இதனை கன கூளவளர்ப்பு முறை என்பர்.

அ. கூளத் தேர்வின் போது கவனத்திற் கொள்ள வேண்டிய காரணிகள்

- விலை குறைந்ததாகவும் இலகுவில் பெறக்கூடியதாகவும் இருக்க வேண்டும்.
- இலகுவில் கையாளக்கூடியதோடு பரிகரிக்க கூடியதாகவும் இருக்க வேண்டும்.
- இலகுவில் தீப்பிடிப்பதற்றதாக இருத்தல் வேண்டும்.
- நீரை விரைவாக உறிஞ்சி தேக்க கூடியதாக இருத்தல்.
- கழிவுகள், தூசிகள் அற்றதாக இருத்தல் வேண்டும்.
- பறவைகளால் உண்ணப்படாததாக இருக்க வேண்டும்.

இதற்கிணங்க கூளமாகப் பயன்படுத்தக்கூடிய பொருள்-களாவன;

i. உமி ii. கைக்கோந்துகள்
iii. மரத்தூள்

ஆ. கனகூள மொன்றினுள் நடைபெறும் தொழிற்பாடுகள்

- நுண்ணங்கிகளின் செயற்பாடுகளால் சேதனப் பொருட்கள் பிரிந்தழியும்.
- $CO_2$, $NH_3$ வெப்பம் என்பன விடுவிக்கப்படும். இதனால்
  - i. கூளமும் பிரிந்தழிந்து கொண்டிருக்கும்.
  - ii. $VitB_{12}$, புரதம் என்பன தொகுக்கப்படும்.
  - iii. வெளியேறும் வாயுக்கள் நுண்ணுயிர்க் கொல்லி-களாகத் தொழிற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இ. கலகூட வளர்ப்பு முறையில் கருத்திற் கொள்ள வேண்டிய விடயங்களாவன.**

- பறவைகள் ஒவ்வொன்றின் பொருட்டும் போதியளவு இடவசதி அளிக்கப்படல் வேண்டும். 60×50cm2 பரப்பளவு பறவை ஒன்றின் பொருட்டு வழங்கப்பட வேண்டும்.
- முட்டையிடும் பொருட்டு முட்டையிடும் பெட்டிகள் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.
- ஓய்வு கால் தாங்கு தடிகள் கூட்டினுள் பொருத்தப்பட வேண்டும்.
- போதியளவு காற்றோட்டத்திற்காக சுவரின் மேல் அரைவாசிப் பாகம் கம்பிவலை பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
- தரையின் 10cm தடிப்பிற்கு கூளமிடப்பட்டிருத்தல் வேண்டும்.

| அனுகூலங்கள் | பிரதிகூலங்கள் |
|---|---|
| 1. மிகவும் வசதியான முறை | 1. தன்னினம் உண்ணல் |
| 2. ஒரு பறவையின் பொருட்டுச் செலவிடப்படும் உற்பத்திச் செலவு குறைவானதாகும். | 2. இலகுவாக நோய்ப்பீடை தாக்கத்திற்கு உள்ளாக வேண்டி ஏற்படும். |
| 3. உணவு வீணாவது தவிர்க்கப்படும். | 3. வளர்ச்சிவீதம் குறைவடைதல். |
| 4. VitB12 கோழிகளுக்கு கிடைக்கும். | 4. முட்டையிடும் கோழிகளின் உற்பத்தி திறன் குறைவடையும். |
| 5. நோய்ப் பீடைகளினால் தாக்கம் ஏற்படுதல் குறைவானதாகும். | |
| 6. ஊழியத் தேவை ஒப்பீட்டளவில் குறைவானதாகும். | |

**ஈ. தனிக்கல வளர்ப்பு முறை:**

இதுவும் செறிவான வளர்ப்பு முறையாகும். ஒரு சிறு கூட்டினுள் (Cell) ஒன்று அல்லது இரண்டு கோழிகள் வளர்க்கப்படும். ஒரு பகுதியில் இத்தகைய ஏராளமான தனிக்கலக் கூடுகள் காணப்படும். இவை ஒன்றன் மேல் ஒன்றாகவும், வரிசைகளிலும் ஒழுங்கு படுத்தப்பட்டிருக்கும். எச்சங்களை சேகரிக்கும் பொருட்டுக் கீழ்ப் புறமாக தட்டொன்று பொருத்தப்பட்டிருக்கும். குறுகிய இடப்பரப்பில் ஏராளமான கோழிகளை வளர்த்துக் கொள்ள முடியும். முழுமையான உணவுக்கலவையினை ஊட்டுவதன் மூலம் பெருமளவு இலாபத்தினை சம்பாதிக்கலாம்.

**அனுகூலங்கள்**

1. சுதேசிய, உள்ளூருக்குரிய மூலப்பொருட்களை பயன்படுத்தி கூடுகளை அமைத்துக்கொள்ளல்.
2. ஊழியத்தினை ஒரே விதமாக பயன்படுத்தல்.
3. உற்பத்தி திறன் 1.3 வீதத்தால் அதிகரிக்கும்.
4. உணவு, நீர் பெறுவதற்கான போட்டி ஏற்படாது.
5. உணவுப் பதார்த்தங்கள் வினைத்திறனாக பயன்படுத்தல்.
6. உணவு மலக்கழிவுகளுடன் சேர சாத்தியமில்லாததால் உணவு தூய்மையானதாகும்.
7. முட்டைகள் சேதப்படுத்துவதும் தன்னினமுண்ணுதலும் தவிர்க்கப்படும்.
8. அடைகாக்கும் பண்பு இல்லாமலாதல்.
9. கழிவுகளை இலகுவாக அகற்றிக் கொள்ளலாம்.
10. முட்டைகளை தூய நிலையில் சேகரித்துக் கொள்ளக் கூடியதாக இருத்தல்.
11. பதிவுகளை இலகுவாக பேணிக்கொள்ளக் கூடியதாக இருத்தல்.
12. இறைச்சி மெதுமையாக இருத்தல். இதனால் விருப்பு ஏற்படும்.
13. வெவ்வேறு பருவ கோழிகளையும் வெவ்வேறு நோக்கில் வளர்க்கப்படும் பறவைகளையும் தனித்தனியாகப் பரிபாலிக்கலாம்.

**பிரதிகூலம்**

1. மூலதனச் செலவு கூடுதல்.
2. கம்பி வலைகள் காரணமாக முட்டைகள் உடைவதற்கான சாத்தியம் உண்டு.

**குறிப்பு:**

பிரதி கூலங்களை குறைத்துக்கொள்வதற்கு பின்வரும் செயற்பாடுகளை மேற்கொள்ளலாம்.

i. கழிவுப் பொருட்களை அடிக்கடி அகற்றல்.
ii. நீர் தெறித்து சிந்துவதை கட்டுப்படுத்தல்.
iii. முட்டைக்கோதுகள் வன்மையாகும் பொருட்டு கூடியளவு Ca கொண்ட சிப்பித்தூள் முதலானவற்றை உணவாகக் கொடுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணங்கள் .........

இங்கு
பாதைகளும் பாதங்களும்
தயாராக உள்ளன.
ஆனால்
இலக்கு இன்னும் தீர்மானிக்கப்படவில்லை.

கூடப் பயணிப்பதற்குப் பலர்
உள்ளனர்.
நான் மட்டும்
பயணிப்பதே ஒவ்வொருவரது இலட்சியமும். .........

கைகளை நீட்டிய வண்ணம்
ஒவ்வொருவரும் பயணிக்கிறார்கள்.
கொடுப்பதற்காக அல்ல,
அகப்படுவதை எடுப்பதற்காக .....

ஒளி இருந்தும்
ஒவ்வொருவரும் இராத்திரிப் பயணிகளாகத்
தடுமாறி நடக்கின்றனர்.

இப் பயணிகளில்
நானும் ஒருவன்,

பாதைகளும்
பாதங்களும் உள்ளவரை
பயணித்துக் கொண்டிருப்போம். .........!!

சி.சிவா
யாழ் பல்கலைக்கழகம்



# புரூஸ்லீ!


எம்.மாயவன்

புரூஸ்லீ. கிழக்கிலும் மேற்கிலும் வயது வேறுபாடின்றி எல்லோராலும் மந்திரம் போல் உச்சரிக்கப்படுகின்ற பெயர். தற்காப்புச் சண்டைக்கலை உலகிலும், திரையுலகிலும் புரூஸ்லீயை அறியாதவர்கள் இருக்க முடியாது. காரத்தே, குங்ஃபூ, மல்யுத்தம், குத்துச்சண்டை என அனைத்திலுமே கால் பதித்தவர்.

புரூஸ்லீ யார்? அமெரிக்காவிலே பிறந்தவர். ஆனால் அமெரிக்க வெள்ளையரோ, நீக்ரோவோ அல்லர். சீனர். அதனால் கிழக்கிற்கும் மேற்கிற்கும் ஒரு பாலமாக அமைந்தவர். 1940ஆம் ஆண்டு நவம்பர் 27ஆம் திகதி சான் பிரான்சிஸ்கோ நகரிலுள்ள மருத்துவ மனையில் லீ பிறந்தார். 'லீ யுவன் காம்' என்று பெற்றோர் பெயரிட்டனர். ஆனால் அந்தப் பெயர் தாதிமார்களின் வாயில் நுழையவில்லை. அமெரிக்காவில் பிறந்த குழந்தைக்கு அப்படி ஒரு பெயர் எதற்கு என தாதிகள் கேள்வி எழுப்பினர். அதனாலே 'புரூஸ்லீ' என்று அழைக்கத் தொடங்கினர்.

புரூஸ்லியின் தந்தையார் லீ ஹாய்சுவென், ஒரு பிரபல சீன இசை நாடக குழுவில் முக்கியஸ்தர். தாயார் கிரேசிலீ, யூரேசிய மாது. குழந்தையாக இருந்த போதே புரூஸ்லீயை பெற்றோர் ஹொங்காங்குக்குக் கொண்டு வந்து விட்டார்கள். தந்தை நாடக நடிகராக இருந்ததால் லீக்கும் நடிக்க வேண்டும் என்ற ஆசை இயற்கையாகவே இருந்தது. குழந்தைப் பருவத்திலே வயதிற்கு மீறிய திறமையும், துருதுருப்பும் புரூஸ்லியிடம் காணப்பட்டன. ஆறு வயது சிறுவனாக இருந்த போது 'த பிகினிங் ஆஃப் எ போய்' (The beginning of a boy) என்ற திரைப்படத்தில் நடிக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

சிறுவனாக இருந்த புரூஸ்லீ ஊர் வம்புகளில் ஈடுபட்டு பல தடவை அடி உதைகள் வேண்டி அழுத வண்ணம் வீட்டிற்கு வருவான். இவ்வாறான சூழ்நிலையில் உறவினர் வீட்டிற்கு ஒருமுறை செல்லும் போது வழியிலே ஹொங்காங்கிலுள்ள



பிரபலமான ஒரு தற்காப்புக் கலை பயிற்சிப் பள்ளியைக் கண்டு கொண்டான். அதுவேதான் புரூஸ்லியின் வாழ்வில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. அப்போது அவனிற்கு வயது பதின்மூன்று. அதில் இணைந்து கொண்ட புரூஸ்லிக்கு அங்கு இடம் பெற்ற பயிற்சிகள் எல்லாம் கரும்பாக இனித்தன. இவ்வாறாக கடுமையான பயிற்சிகளில் ஈடுபட்ட புரூஸ்லீ, இருபது வயதிற்குள் இருபதிற்கும் மேற்பட்ட படங்களில் சிறுசிறு பாத்திரங்களில் நடித்து விட்டார். ஹொங்கொங்கில் இவரிற்கு எதிராக சிலர் செயற்பட்டார்கள். இதனால் அமெரிக்காவிற்கே சென்ற புரூஸ்லீ, வோஷிங்டன் பல்கலைகழகத்தில் படிப்பைத் தொடங்கினார்.

பல்கலையில படித்துக் கொண்டிருந்த சமயம் லின்டா எமெரி என்ற மாணவியை சந்திக்கின்றார் புரூஸ்லி. குங்ஃபூ கலையில் மிகுந்த ஆர்வம் உடைய லின்டா, குங்ஃபூ கற்றுத் தரும்படி புரூஸ்லியைக் கேட்டுக் கொண்டார். லின்டாவுக்குப் பயிற்சி அளிக்க ஆரம்பித்தார் புரூஸ்லீ. பயிற்சியுடன் அவர்களின் காதலும் ஆரம்பமானது. காதலையும் அதன் மென்மையையும் எனக்குக் கற்றுத் தந்தவர் லின்டா என புரூஸ்லீ ஓரிடத்தில் கூறியுள்ளார். காதலைப் பற்றி புரூஸ்லி சொல்லும் போது "காதல் என்பது தீப்பற்றிக் கொண்டது போன்ற ஒரு நட்புறவு. ஆரம்பத்தில் அது கொழுந்துவிட்டு எரியும் கவர்ச்சியாக இருக்கும். சூடாகவும் இருக்கும். காதல் முதிர்ச்சியடையும் போது உள்ளங்களும் பக்குவமடைந்து விடுகின்றன. அப்போது அது கனல் தகதகக்கும் கரிபோல, நீறு பூத்த நெருப்பு போல விளங்கும்" என்கிறார்.

தொடரும் .........

ஐக்கிய நாடுகள் சபையானது 2003 ஆவது ஆண்டை 'அனைத்துலக நன்னீர் ஆண்டு' எனப் பிரகடனப்படுத்தியுள்ளது.

## கிரிக்கெட் உலக கிண்ண விவரம்

| போட்டித் தொடர் இடம்பெற்ற ஆண்டு | இறுதிப்போட்டி இடம்பெற்ற இடம் | இறுதி ஆட்டத்தில் மோதிய அணிகள் | உலகக்கிண்ணத்தை கைப்பற்றிய அணி |
|---|---|---|---|
| 1ஆவது 1975 ஜுலை 21 | இங்கிலாந்து - லோட்ஸ் | அவுஸ்திரேலியா- மேற்கிந்தியா | மேற்கிந்தியா |
| 2 ஆவது 1979 ஜுன் 23 | இங்கிலாந்து - லோட்ஸ் | இங்கிலாந்து - மேற்கிந்தியா | மேற்கிந்தியா |
| 3 ஆவது 1983 ஜுன் 25 | இங்கிலாந்து - லோட்ஸ் | மேற்கிந்தியா - இந்தியா | இந்தியா |
| 4 ஆவது 1987 நவம்பர் 8 | இந்தியா - கல்கத்தா ஈடன்தோட்டம் | அவுஸ்திரேலியா - இங்கிலாந்து | அவுஸ்திரேலியா |
| 5 ஆது 1992 மார்ச் 25 | அவுஸ்திரேலியா மெல்போர்ன் | இங்கிலாந்து - பாகிஸ்தான் | பாகிஸ்தான் |
| 6 ஆவது 1996 மார்ச் | பாகிஸ்தான் - லாகூர் | அவுஸ்திரேலியா - இலங்கை | இலங்கை |
| 7 ஆவது 1999 ஜுன் 20 | இங்கிலாந்து - லோட்ஸ் | பாகிஸ்தான் - அவுஸ்திரேலியா | அவுஸ்திரேலியா |
| 8 ஆவது 2003 மார்ச் 23 | தென்னாபிரிக்கா - ஜோகனஸ்பேர்க் | இந்தியா - அவுஸ்திரேலியா | அவுஸ்திரேலியா |
| 9 ஆவது 2007 | மேற்கிந்திய தீவுகள் | ? | ? |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தர்மத்தின் வழியில் சமாதானம்"

கடந்த 1982ஆம் ஆண்டு - சுமார் 21 வருடங்களுக்கு முன்னதாக "இலங்கையில் முதலாவது உலக இந்து மாநாடு நடைபெற்றிருந்தது.

இரண்டாவது உலக இந்து மாநாட்டையும் மே மாதம் 2003ம் ஆண்டு முற்பகுதியில் கொழும்பில் நடத்துவதற்கென சுமார் 50 இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ள இந்து சமய கலாசார அமைச்சு, தேவையான ஏற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளது. 'தர்மத்தின் வழியில் சமாதானம்' என்ற தொனிப் பொருளில் ஆறுநாள்கள் நடைபெறும் இம் மாநாட்டில் கலந்து கொள்வதற்கென சுமார் 15 நாடுகளில் இருந்து ஆன்மீகப் பெரியார்கள், அருளாளர்கள் மற்றும் அறிஞர்கள் வருகை தரவுள்ளனர். உலக இந்து மாநாட்டை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே போட்டிகள் நடத்தப்பட்டு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. அத்துடன் ஆய்வரங்கு அமர்வுகள், கலாசார நிகழ்வுகள், கலைப் பொருட்காட்சிகள், இளைஞர் மற்றும் மாதர் அரங்குகள், கருத்தரங்குகள், சிறப்பு மலர் வெளியீடு போன்றனவும் இடம் பெறவுள்ளன. மேலும் யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை, கண்டி, நுவரேலியா, மாத்தளை, பதுளை, மன்னார், அம்பாறை போன்ற இடங்களிலும் பிராந்திய மாநாடுகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. ஆன்மீக ஜோதிகளும் வலம் வரவுள்ளன.

தமிழ் மொழியும் இந்து சமயமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்துள்ளவை. அவற்றிற்கு புத்துயிர் ஊட்டும் வகையில் இம் மாநாட்டைப் பரந்தளவில் ஏற்பாடு செய்துள்ள இந்து சமய கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனின் பணி சிறப்புக்குரியது.

- கபிலன் -



# பொன் விளக்கு

சுடர்விடு பொன்விளக்கே - உன்
சுடர் ஒளிவிடும் என்னருகே!
இடர்களை பொன்விளக்கே - உன்
இலட்சியம் ஒளிவிடும் என்னருகே!

தமிழ்வளர் பொன்விளக்கே - உன்
தகைமை ஒளிவிடும் உன்னருகே!
பகைதொலை பொன்விளக்கே - உன்
பாசம் ஒளிவிடும் உன்னருகே!

அறிவியல் வேண்டும் பொன்விளக்கே - உன்
ஆளுமை ஒளிவிடும் என்னருகே!
பொறியியல் வேண்டும் பொன் விளக்கே - உன்
புகழ் ஒளிவிடும் என்னருகே!

பு - திலீப்காந்த்
பொறியியல் பீடம் -
மொறட்டுவ பல்கலைக்கழகம்
எசு

ஆஸ்திரேலியா அணியின் நட்சத்திரமும் சிறந்த சுழல் பந்து வீச்சாளருமான ஷேன்வோர்ன் 2003 ஆம் ஆண்டு கிரிக்கெட் உலகக்கிண்ண ஆட்டங்களில் பங்குபற்ற இறுதிநேரத்தில் தடை விதிக்கப்பட்டது. 'டையூரெட்டிக்' என்ற தடை செய்யப்பட்ட ஊக்கமருந்தை உட்கொண்டமைக்காக இத்தடை விதிக்கப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அங்குசம் தை - மாசி இதழின்
## 'முத்துக் குளிப்புப்' போட்டி

### வெற்றிபெற்ற அதிஷ்டசாலிகள்,

- முதலாம் பரிசு - ரூபா 500
  சி. தனுஜன்
  வகுப்பு 8 - சி
  யாழ் மத்திய கல்லூரி
- இரண்டாம் பரிசு - ரூபா 300
  ஸ்ரீ பிரேம்ராஜ்
  வகுப்பு 6 - ஏ
  சென்ஜோன்ஸ் கல்லூரி
- மூன்றாம் பரிசு - ரூபா 200
  பஞ்சலிங்கம் அம்பிகை
  வகுப்பு 6
  வேம்படி மகளிர் கல்லூரி

### பாராட்டுப் பெறும் அதிஷ்டசாலிகள்

- சிவகுருநாதன் சுஜானனன்
  வகுப்பு 7 - சி
  யாழ் கொக்குவில் இந்துக் கல்லூரி
- மாலினி தர்மலிங்கம்
  வகுப்பு - 2004 உ.தர
  கலைப்பிரிவு
  கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரி
- உமையாந்தினி. தங்கலிங்கம்
  வகுப்பு - 11
  வேம்படி மகளிர் கல்லூரி
- ரி. நிரோஜினி
  சந்தையடி கிழக்கு
  கொடிகாமம்
- மேரி ஜான்சி மகாராஜா
  வகுப்பு - 10
  யாழ் கோண்டாவில் இந்துமகா வித்தியாலயம்.


அங்குசம் வளர எமது நல் வாழ்த்துக்கள்

அபிடி
எலக்ரோனிக்ஸ்



அங்குசம் வளர எமது வாழ்த்துக்கள்

யாழ்ப்பாணம்

இல...... கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்

தொ.பே. இல.........................




அடுத்த இதழில்
வருகிறார்......

பல்துறையிலும்
சிறந்து விளங்கிய
உலகப் புகழ் பெற்ற
அதிமானுடன்......


மனிதம் மயங்கும்
'மோனலிசா'வின்
சிருஷ்டி கர்த்தா ...



**லியனார்டோ டாவின்ஸி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உலகை உலுக்கும் சார்ஸ்



"சார்ஸ்" (SARS) என்ற புதிய வகை உயிர்கொல்லி நோய் உலகெங்கும் மிக வேகமாகப் பரவி வருகிறது. 'சார்ஸ்' (Severe Acute Respiratory Syndrome) நோய்க்கான காரணி 'கொரனா வைரஸ்' (Corona Virus) ஆகுமென உலக சுகாதார நிறுவனம் அறிவிக்கிறது.

சீனாவின் தெற்கு மாநிலமான குவாங்டாங்கில் தான் 'சார்ஸ்' முதலில் தாக்கியுள்ளது. எனினும் வியட்நாம் நாட்டிலேயே முதன்முதலாக அது கண்டறியப்பட்டது.

# போக்குவரத்து சைகைகளை அறிந்து கொள்வோம்



முன்னாலும் பின்னுமிருந்து வரும் வாகனங்களை நிறுத்துங்கள்.

முதன் முதலில் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு விதியை நடைமுறைக்கு கொண்டு வந்த மன்னன் ஜூலியஸ் சீஸர் ஆவான். அவன் இயற்றிய முதல் விதிமுறை ரோம் நகரில் பெண்கள் ரதங்களை ஓட்டக்கூடாது என்பதாகும்.


PBR PALM BEACH RESTAURANT


யாழ். மண்ணில்.........

Multi Cuisine (Veg & Non Veg) Restaurant


சகலவிதமான சைவ - அசைவ உணவகம்

(பார்சல்களும் பெற்றுக்கொள்ளலாம்)

- முற்றிலும் குளிரூட்டப்பட்ட தனி இடத்தில் குடும்பத்தினருடன் உணவருந்தி மகிழ்ந்திட.......
- தலைசிறந்த இந்திய உணவுத் தயாரிப்பாளர்களால் தயாரிக்கப்பட்ட உணவுகளை ருசித்திட..........
- ஒரு தடவை சுவைத்துப் பாருங்கள் - பின் தினமும் சுவைக்கத் தோன்றும் உங்களுக்கு......
- உல்லாச பயணிகள் தங்குவதற்கு குளிரூட்டப்பட்ட, குளிரூட்டப்படாத அறைகள் வாடகைக்கும்..



திருமண வைபவங்களா.....?



பிறந்தநாள் கொண்டாட்டங்களா......?

பிரியாவிடை வைபவங்களா.....?

விருந்துபசாரங்களா..........?

எதுவானாலும் இனிய சுவையுடைய உணவுகளுடன் நிறைவேற்றிட.........

பாம் பீச் ரெஸ்ரோறன்ற்

இல. 10/11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

☎ 077 - 733316
077 - 153889

உங்கள் தேவையே - எங்கள் சேவை.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்குசம் தை - மாசி இதழின்

## அட்டைப்படப் போட்டி

- ➢ முதலாம் பரிசு - ரூபா 500
  எஸ். என். சிந்தா
  விவசாய பீடம்
  யாழ் பல்கலைக்கழகம்
- ➢ இரண்டாம் பரிசு - ரூபா 300
  கே. ஸ்ரீதேவி
  மந்துவில் கிழக்கு
  கொடிகாமம்
- ➢ மூன்றாம் பரிசு - ரூபா 200
  க. ஜெசிதன்
  கலைப்பீடம்
  யாழ் பல்கலைக்கழகம்.

✂ இங்கே கத்தரிக்கவும்

## 'முத்துக்குளிப்பு' போட்டி
## பரிசுக் கூப்பன்

பெயர் : ..............................

வகுப்பு : ..............................

பாடசாலை : ..............................

மாணவர் ஒப்பம் : ..............................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த மர நிழலில்

மு. மயூரதாஸன்





இந்த மரநிழலில் மனிதர்கள் மட்டுமன்றி பகுத்தறிவு அற்ற மிருகங்களும் வந்து போகின்றன. மாலை நேரத்தில் மாடுகள் நிரை நிரையாக வந்து, நிழலில் ஒதுங்கி இரை மீட்டுகின்றன. அவை தம்மிடையே ஏற்பத் தாழ்வுகள் அற்ற உணர்வோடு பழகிக் கொள்வதனைப் பார்க்கின்ற எந்த மனிதரும் நாணித் தலை குனிவர். சிறிய நீர்க் தடாகம் போன்ற பெரிய தொட்டி ஒன்றில் எந்நேரமும் தண்ணீர் இருக்கும். விலங்குகளிற்கான சாந்தியின் பொருட்டு கட்டப்பட்டது அது. அதனைக் கட்டிய பெரியார், ஏனையவர்களைப் போல தொட்டியில் தனது பெயரைப் பொறிக்க மறந்தாலும் எந்நேரமும் அதில் தண்ணீர் ஊற்றி வைக்க மறப்பதில்லை. அப்பேற்பட்ட மனிதர் தான் கனகசபை மாஸ்டர்.

வேலைப் பளு காரணமாக கனகசபை மாஸ்டர் திடீரென எங்காவது போவதாக இருந்தாலும் தனது அருகு வீட்டுப் பையனான நேசனை அழைத்து "தொட்டியில் எந்நேரமும் தண்ணீரைப் பார்த்துக் கொள்! மாடுகள் களைப்பாக வந்து, தண்ணீர் இன்றி தாகத்தினால் அவதியுறும் படி விட்டு விடாதே!" எனச் சொல்லித் தான் செல்வார். ஊருக்குள் அவருக்கு மதிப்பு அதிகம். நேசனிற்கு அவர்தான் ஆரம்பத்தில் "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்று அகரம் தொடங்கிய ஆஸ்தான உபாத்தியாயர். கனகசபை மாஸ்டர் சொல்வதனை கண்ணும் கருத்துமாக நிறைவேற்றி வருவது நேசனிற்குப் பிடிக்கும். நல்ல குணம் படைத்தவன்.

அது மட்டுமல்ல உயிரினங்களோடு பிரியமாக நடந்து கொள்வது நேசனிற்கு பிடித்தமான ஒன்று. "ஐந்தறிவு படைத்தவை. அவற்றை நாம் தான் வாழ்விக்க வேண்டும்!" என்று அடிக்கடி சொல்வான். பெரியவர்களெல்லாம் சொல்லும் நேசனிற்கோ பத்து வயது தான். ஆனால் படித்த மேதாவிகள் போல கதை பேசுவதில் அவனிற்கு நிகராக யாருமே அந்த

மரத்தடியில் கிடையாது. அதற்குக் காரணம், கனகசபை மாஸ்டரின் அறிவூட்டலே! சுட்டிப் பையனாக சுற்றி வரும் நேசனை யாருமே வெறுப்பதில்லை. சின்னஞ் சிறு குறும்புகள் செய்வதிலும் அவன் வின்னன்.

மாடுகள் நிரைநிரையாக வந்து தண்ணீர் குடிப்பதனைப் பார்த்து மகிழ்வான். அவை தம்மிடையே ம்...மா.... ம்...மா..... என்று ஏதோதோ பேசிக் கொள்ளும். ஒன்றோடு ஒன்று [illegible] கொள்ளும். ஒன்று மற்றொன்றை வாலால் தடவும். [illegible] மொய்க்கும் ஈக்களை அப்புறப்படுத்தும். நீர் நிலைக்[illegible] படுத்திருந்து இளைப்பாறும். அந்த அற்புதமான [illegible] பார்த்து மனம் மகிழ்வான் நேசன்.

[illegible] ஒருவித பூரிப்பு எழும். தான் மாடுகளிற்கு தாக சாந்தி [illegible]டதாக எண்ணி நிறைவடைவான்.

அந்த [illegible], மாலை நேரங்களில் சிறுவர் சிறுமியரின் பயிற்சிப் பாசறையாக மாறிவிடும். கூத்தும் கும்மாளமுமாய் உ[illegible]ரண்டு ஓடி விளையாடுவர்.

இவை எல்லா[illegible]யும் பார்க்கின்ற ஊர் பெரியவர்கள் எல்லோருமாய் அந்த [illegible]த்தினை மையமாக வைத்து பூங்கா ஒன்றினை அமைத்தல் வேண்டும் என்று கருதினர். தங்களுடைய விருப்பத்[illegible] நேர [illegible] ஒன்று கூடலில் கனகசபை [illegible] கொண்டார்கள். இவ்வாறான பொதுச் சே[illegible] ஊக்கம் கொண்ட மாஸ்டர் முழுமனதாக ஒத்தா[illegible] கூறினார்.

எல்லோருமாக சிறுவ[illegible] திரும்பினார்கள். சிறுவர்களிற்கோ அள[illegible]னே! பூங்கா என்றால் அதுவும் மரத்தடியையே [illegible], இனி விடுகளிற்குப் போவார்களோ என்று [illegible] பெரியவர்களிற்கு வருத்தமும் செய்தது.

சிறுவர்களின் பக்கமாக இருந்து [illegible] குரல் ஓங்கி ஒலித்தது. சிறுவர்கள் மத்தியில் அவன் [illegible] தலைவனாகவே மனதளவில் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டவன். தங்களுடைய விருப்பு வெறுப்புக்கள் எதுவாயினும் நேசனூடாகவே ஏனையவர்களிற்கு தெரியப்படுத்துவர். சிறுவர்கள் எல்லோருக்கும் ஏகப்பட்ட மகிழ்ச்சி. ஒவ்வொருவரது மனங்களிலும் பல்வேறு பூங்காக்கள் தெரியத் தொடங்கின.

(நிழல்கள் நீளும.....)



## "முத்துக்குளிப்புப் போட்டி"

பரிசு ரூபா ஆயிரம்

1. சார்புக் கொள்கையை வெளியிட்டவர் யார்?
2. தனிமனித சுதந்திரத்தைப் பாதுகாக்கும் முதலாவது எழுத்து மூலச் சான்று எது?
3. AIDS இன் நோய்க்காரணியான H.I.V தொற்றும் பிரதானமான வழி எது?
4. உயிர் கொல்லி நோயான 'SARS' என்பதன் விரிவாக்கம் யாது?
5. கருவில் உருவாகும் குழந்தை ஒன்று ஆணா, பெண்ணா என்பதனை எது தீர்மானிக்கின்றது?
6. 9வது கிரிக்கெட் உலகக்கிண்ணப் போட்டி எந்த நாட்டில் நடைபெறவுள்ளது?
7. ஐ.நா. சபையானது 2003 ஆம் ஆண்டை எவ்வாண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ளது?
8. இடம்பெயர்ந்தோர் தொடர்பான ஐ.நா.வின் நெறிமுறை விதிகள் எவற்றை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டன?
9. கூரியர் சேவையானது, சாதாரண தபால் சேவையிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது?
10. கோழி வளர்ப்பினை மேற்கொள்ளும்போது கவனத்தில் கொள்ளவேண்டிய பிரதான காரணிகள் எவை?

➔ இக்கேள்விக்கான விடைகள் யாவும் இவ் இதழிலேயே இடம்பெற்றுள்ளன. இப்போட்டியில் பாடசாலை மாணவர்கள் மட்டுமே பங்குபற்ற முடியும்.

➔ பாடசாலை மாணவர்கள், பூர்த்தி செய்யப்பட்ட விடைகளை பரிசுக் கூப்பனுடன் இணைத்து எதிர்வரும் 15-04-2003 இற்கு முன்னர் எமக்குக் கிடைக்குமாறு அனுப்பிவைக்க வேண்டும்.

| | |
|---|---|
| முதற் பரிசு | 500.00 |
| இரண்டாம் பரிசு | 300.00 |
| மூன்றாம் பரிசு | 200.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிகரம்

## புதுமை லோலன்

மாலை நேரம் - யாழ்ப்பாண நகரமெங்கும் ஒரே பரபரப்பு. மூலை முடுக்குகளிலிருந்து தமிழர் கூட்டம் சாரி, சாரியர்க முற்றவெளி மைதானத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. ஏதோ ஒரு அரசியல் மாநாடாகத்தான் இருக்க வேண்டும். இல்லையேல் இவ்வளவு பெருங்கூட்டம் இலக்கிய மகாநாடு பார்க்கச் செல்வது கிடையாதே!

காலதேவனின் கரங்கள் பட்டதால் வயதாகிவிட்ட ஒரு கிழவர் - தள்ளாடும் நிலை. தளர் நடை போட்டுப் பொல்லூன்றி மெல்ல மெல்லச் செல்கிறார் மக்கள் கூட்டத்தோடு. யாரோ ஒரு இளைஞன் கிழவரின் பரிதாப நிலை கண்டு இரக்கப்படுகிறான்.

"அப்பா ! எங்கையணை போற"
இளைஞன் கேட்கிறான்.
" இந்தக் கூட்டத்தை பார்ப்பமெண்டு"
கிழவர் முடிக்கிறார்.
" சாகப்போற உனக்கு இதெல்லாம் ஏன்?
'சும்மா' வீட்டில் கிடக்கிறதுக்கு......."
"சாக முதல் அந்தப் பெடியன்ர பேச்சை இன்னும்
ஒரு முறை கேப்பமெண்டு நினைத்துத் தான் போறேன்"
"எந்தப் பெடியன்"
பேர் தெரியாதே !......"
" மறந்திட்டன்."...........
"யாராயிருக்கலாம்.......... ஓ.............
புதுமை லோலனா?"
"ஆமாம் !............... விட்டுடாதே.................. அதே பெடியன் தான்"

*        *        *

இப்படியொரு உரையாடலை 1962ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட 'ஈழத்தில் யான் கண்ட சொற் செல்வர்கள்' என்ற தனது நூலிலே ஈழத்துச் சிவானந்தன் எழுதியுள்ளார்.
ஆம், எழுத்தாளனாகவும் அதிசிறந்த பேச்சாளர்களில் ஒருவராகவும் விளங்கிய புதுமைலோலன் குறித்த விரிவான கட்டுரை உள்ளே.....

-ஆசிரியபீடம்
"அங்குசம்"

அங்குசம் ஆசிரியர் குழுவினரால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org